Digitization by eGangotri-South Center

சைவாகமங்களில் திருக்கோயில் அமைப்பு



ஒன்பதாமாண்டு விழா மலர்

வெளியீடு :

ஸ்ரீ லோகாம்பிகா வேத சிவாகம வித்யாலயம்

திருப்பாலைவனம்

2004

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சைவாகமங்களில் திருக்கோயில் அமைப்பு



ஒன்பதாமாண்டு விழா மலர்

வெளியீடு :

ஸ்ரீ லோகாம்பிகா வேத சிவாகம வித்யாலயம்

திருப்பாலைவனம்

2004

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நூல் குறிப்பு

தலைப்பு : சைவாகமங்களில் திருக்கோயில் அமைப்பு

தொகுப்பாசிரியர் : சிவாகம ஞானரத்னாகரம்
டாக்டர். D.D.சோமசுந்தர சிவாசார்யார்,
M.A.,Ph.D (SAN)

தாள் அளவு : டிம்மி 1/8

பதிப்பாசிரியர் குழு : ஸ்ரீ வாமதேவாத் பப்ளிகேஷன்ஸ்
S.L.V.S. வித்யாலம்,
திருப்பாலைவனம், பொன்னேரி-601 204.

அச்சிட்டோர் : T.L.S.பிரிண்டர்ஸ்
நெ. 9, தாயுமான் செட்டி தெரு,
பொன்னேரி – 601 204.
☎: 954119-274228

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீ லோகாம்பிகா வேத சிவாகம வித்யாலய

நிறுவனர் & நிர்வாகி

மாங்காடு குருஜி

சிவஸ்ரீ தி. து. சுவாமிநாத சிவாசார்யர்

தலைவர் - டாக்டர். T.S.ராமநாதன், M.B.B.S.,

செயலர் - சிவஸ்ரீ T.D.பாலீச சிவாசார்யர்

நிர்வாக உறுப்பினர் - திரு. A.V.கங்காதர குருக்கள்

அறங்காவலர் போஷகர் - மாங்காடு S.ரவி சிவாசார்யர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தொகுப்பாசிரியர் அணிந்துரை

சிவேன ஸ்தாபிதஸ்ஸைவஹ சைவேன ஸ்தாபிதஸ் சிவஹ என்று சிவபெருமான் சொல்லியவண்ணம் கவிஞர் கண்ணதாசன் இறைவன் படைத்த உலகினிலே மனிதன் வாழுகிறான். மனிதன் வடித்த சிலையினிலே இறைவன் வாழுகிறான். என்ற பொருள் செறிந்த பாட்டாலும் நாம் நன்கு உணர வேண்டியது என்னவெனில் உலகைப்படைத்து உயிர்களைப் படைத்து உவகைமிகு இன்பங்களைத்தந்து உலகோரை அருளாட்சி புரிந்துவரும் இறைவனுக்குக் கைமாறாக ஏதும் செய்ய இயலாதவர்கள் அவ்விறைவனுக்கு ஆங்காங்குத் திருக்கோயில்களைச் சிவாகமம் சிற்ப சாஸ்திரம் ஆகியன கூறும் வகையில் எழுப்பி இறைவனை உருவாகவும், அருவுருவாகவும் ஸ்தாபித்து, சிவாகம முறைப்படி பூஜை அலங்காரம் திருவிழாக்களைச் சிறப்பாக நடத்தி நெஞ்சார வழிபட்டு அஞ்சாமல் வாழ்ந்து, அனுதினமும் அஞ்செழுத்தை ஓதிஓதி அவனருளாலே அவன் தாள் வணங்கி அவனடியை அடைதலே மனிதப் பிறவியின் மாபெரும் பயனாகும்.

இவ்வாறு திருக்கோயில் அமைக்கத் தேவையான இடம் நேரம் முறை இவைகள் சிவாகமங்களிலும், சிற்பசாஸ்திரங்களிலும் தெள்ளத்தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. சிற்பசாஸ்திரம் நன்குணர்ந்த ஸ்தபதியும் சிவாகமம் நன்குணர்ந்த சிவாசார்யரும் இணைந்து கலந்துபேசி திட்டம் தீட்டி நேரிய முறையில் அமைக்கப்படவேண்டியவை திருக்கோயில்களும் திருவுருவங்களும் ஆகும்.

ஆனால் கோயில் கட்டவேண்டும் என்றால் இது ஸ்தபதிக்கே உரியப்பணி எனவே ஸ்தபதியிடம் தான் கூற வேண்டும் என்றும், கும்பாபிஷேகம் நித்யபூஜை உற்சவம் என்றால் அதற்கு சிவாசார்யரைத்தான் தேடவேண்டும் என்ற நிலையும் உள்ளது. இது தவறு, ஏனெனில் சிவாகமம் சிற்பியையும் ஸ்தபதியையும் தாயாகவும் சிவாசார்யரை தகப்பனாராகவும் தெய்வம் என்ற குழந்தைக்கு உருவகப்படுத்தி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உறுதியாகச் சொல்லுகிறது. எனவே கோயில் அமைக்க விரும்புவோர் விபரம் புரியாமல் ஸ்தபதியை அழைத்தவுடன் அவர் இக்கோயிலை மகாகும்பாபிஷேகம் செய்ய இருக்கும் சிவாசார்யரைத் தேர்ந்தெடுத்து இருவரும் இணைந்தே திருக்கோயில் நிர்மாணித்து திருக்குடமுழுக்கு கும்பாபி ஷேகம் செய்ய வேண்டிய நியதியை எல்லோரும் உணர வேண்டும் என்பதே இந்நூலின் நோக்கம். இதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதே இதிலடங்கிய பகுதிகள் இந்நூல்விரி வஞ்சி மேற்கோள்கள் அனைத்தும் மட்டுமே எங்கெங்கு உள்ளது என்று மட்டும் குறிப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளன. அவை பின்னர் மூலஸ்லோகங்களும் தமிழ்விரிவுரையுடன் வெளிவர இருக்கின்றன. இந்நூல் சிவாகமம் பயிலும் மாண வர்களுக்குப் பாடநூலாக அமையும் வண்ணம் தொகுத் தெழுதப்பட்டுள்ளது. சிவாகமம் பயிலும் மாணவர்கள் மூலாகமங்களைப் படித்து அறிந்து புரிந்துகொள்ள விரும்ப வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு சுருக்கம் மட்டும் தரப்பட்டுள்ளது.

இனி திருக்கோயில் அமைக்க முற்படுபவர் இவ்விதி முறைகளை மீறாமல் அமைக்கவே முன்வரவேண்டும் என்பதும் சிவாகம முறைப்படியே எல்லா ஆலயங்களிலும் சிவாசார்யகளே பூஜை செய்யவேண்டும் என்பதும் உறுதியா கவும் இறுதியாகவும் அறுதியிட்டும் கூறப்படுகிறது.

வீடுகள் வாஸ்து சாஸ்திரப்படி அமையாவிட்டால் வீட்டில் உள்ளவர்களுக்கு மட்டும் தான் சிரமங்கள்மிகும் அதை உடனடியாக சரிசெய்ய வீட்டுத் தலைவர் முற்படுவார் அது போல சிவாகம சிற்பசாஸ்திரப்படி திருக்கோயில் அமை யாவிட்டால், நாட்டு மக்கள் எல்லோரும் அவதிக்குள்ளா வார்கள். எனவே, "நுண்ணிய கருமமும் எண்ணித்துணிக" "செய்வன திருந்தச்செய்," "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" போன்ற முதுமொழிகளைத் தெரிந்திருந்தும் சரியாக செய்ய முற்பட எல்லோரும் முயற்சிக்கவேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இது பால பாடம் போல் கற்பிக்கப்பட்டாலும் இதன் அடிப்படையில் மேலும் பல விஷயங்களில் சிவாசார்ய வித்யார்த்திகள் கற்றறிந்து கேட்டறிந்து ஆய்ந்தறிந்து ஐயமற தெளிந்து செய்விக்க வருவார்கள் என நம்புகிறேன். சிவாக மங்களில் மேற்கோள்கொண்ட பகுதிகளை மூலமாக ஸம்ஸ்கிருதத்தில் தெளிவுரையாகத் தமிழிலும் வெளிவர நூலாக்கத் தொகையின் பகுதிகளையோ அல்லது நூலின் விலையை எத்தனைக் காப்பிகள் பிரதிகள் வேண்டும் என்ற றிய ரூபாய் நூறு நன்கொடை விலையாக வசூல் செய்து கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவைத்தால் நூல் 200 ரூபாய் ஆனாலும் நூறு ரூபாய்க்கே முன் பணம் செலுத்தி ரசீது பெறுவோருக்கு அனுப்பிவைக்கப்படும். விரும்பிப்ப டியுங்கள் திரும்ப சிந்தியுங்கள் தக்கவர்களிடம் ஐயங்களைக் கேட்டுத் தெளியுங்கள்.

இவண்,

"சிவாகம ஞானரத்னாகரம்"

டாக்டர். **D.D.சோமசுந்தர சிவாசார்யார்,**

M.A., Ph.D (SAN)

முதல்வர், S.L.V.S. வித்யாலயம்

திருப்பாலைவனம் - 601 205.

☎: 04119 (278651)

"பதிப்பாசிரியர் குழு"

ஸ்ரீ வாமதேவாத் பப்ளிகேஷன்ஸ்

S.L.V.S. வித்யாலயம்

திருப்பாலைவனம் & அஞ்சல்

பொன்னேரி வட்டம்

திருவள்ளூர் மாவட்டம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ௐ

சிவாகமங்களில் திருக்கோயில்

சிவபெருமான் உலகின் கர்த்தா ஆவார். சிவனால் ஆன்மாக்களுக்கென அருளிச் செய்யப்பட்ட நூல்களாக வேதங்களும் சிவாகமங்களும் விளங்குகின்றன. வேதங்கள் பொதுநூல்கள் என்றும், சிவாகமங்கள் சிறப்புநூல்கள் என்றும் போற்றப்படுவன. சிவாகமங்கள் காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்ஷ்மம், சஹஸ்ரம், அம்சுமான், சுப்ர பேதம், விஜயம், நிஸ்வாசம், ஸ்வாயம்புவம், ஆக்னேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்த்ரஞானம், முகபிம்பம், ப்ரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் எனும் இருபத்தெட் டாகும். இவை மூலசிவாகமங்களாகும். இச்சிவாகமங்கள் சதாசிவ மூர்த்தியினது சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் எனும் ஐந்து முகங்களி லிருந்து சிவகணங்களுக்கும், ருத்ர கணங்களுக்கும் உபதே சிக்கப்பட்ட சிறப்புடையன. இதன் காரணமாகவே சிவ பேதம், ருத்ரபேதம் எனப் பேசப்படுவன. இச்சிவாகமங்க ளுக்குரிய உபாகமங்களும் பலவுள. அவை இருநூற்றேழு, சதாசிவமூர்த்தியின் அங்கமாகவும் விளங்கும் சிவாகமங்க ளின் சிறப்புக்களையும், விரிவுகளையும் உபதேசக் கிரமங்க ளையும், கிரந்த சங்கியைகளையும் சிவாகமங்களின் தந்திரா வதாரபடலம் எனும் முதற் படலம் விரிவுபடச்சுட்டி நிற் கின்றன.

சைவத்திருக்கோயில் அமைப்பு முறையானது சிவாகமமரபு சார்ந்தது. இச்சிவாகம மரபுகளைப்பேணு வோரர் சிவாச்சாரியார்களும், ஸ்தபதிகளுமாவர். தேவஸ் தர்னம், தேவகிருஹம், தேவாயதனம், தேவாலயம், தேவகுலம், தேவமந்திரம், தேவஸ்மம், தேவபவனம்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சைத்தியம், க்ஷேத்திரம் என்றெல்லாம் குறிக்கப்படும் ஆலய மானது நிறைவு பெற்ற திருக்கோயிலாக இறைவன் உறையும் இன்னிடமாகச் சுட்டப்படுகின்றது. திருக்கோயில் மரபுகளைச் சிவாமங்கள் கூறும் கிரியைமரபுகளுக்குரிய முக்கிய ஸ்தானமாக விளங்குவது திருக்கோயில் திருவுருவ அமைவுகளும், திருக்கோயில் கட்டட அமைப்பு முறைகளு மாகும். அத்தகைய திருக்கோயிலின் கட்டட அமைப்பு முறைகள் கர்ப்பகிருஹத்தை மையமாகக் கொண்டு மண்ட பங்கள், பிரா்காரங்கள் என்றும், முறைகளுமாகும். அத்த கைய திருக்கோயிலின் கட்டடஅமைப்பு முறைகள் கர்ப்ப கிருஹத்தை மையமாகக்கொண்டு மண்டபங்கள், பிராகா ரங்கள் என்றும், விமானம் கோபுரங்கள் என்றும், மூலால யம், பரிவாராலயங்கள் என்றும் விரிந்துசெல்லும் சிறப்புடை யன. அத்தகைய திருக்கோயில் கலை, பௌதிக, தெய்விக, இயற்கை அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுவிளங்கும் தெய்விகம் நிறைந்த கட்டடமே திருக்கோயில் எனச் சுட்டப் படுகின்றது. சிவாகமங்கள் கிரியைகள் பற்றிக் கூறும் நூல் எனச் சிறப்பாக கூறப்படுகின்றது. இச்சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன. அவற்றுள் க்ரியா பாதம், கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் வகையீட்டினுள் கிரியாபாதத்தை தெளிவுபடுத்தும் தன்மையில் அமைந்து காணப்படுகின்றன. சிவாகமங்கள் கூறும் கிரியைகளுள் முதலாவது நிலையாய் பேசப்படும் படி நிலை கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் என்பதாகும். இப்படி நிலையில் முழுமையான நிலையில் ஆலயம் அமைந்து பூசை, வழிபாடுகளுக்குரிய மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்யப் பட்ட மூர்த்திக்கு நிகழும் நித்ய பூசைகள், நைமித்திய பூசைகள், காமிக பூசைகள், மஹோற் சவங்கள், மாச பூசைகள் என விரிந்து பரந்து செல்லும் கிரியைகளின் தன்மை களை சிவாகமங்கள் விதிநூல்களாக இருந்து விளக்கு கின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கிரியைகள் ஒருவகையான கலை எனப் போற்றப்படுவன. கிரியைகளுக்கு நிலைக்களனாக விளங்குவன திருவுருவுங்கள். இத்திருவுருவங்களைத் தாங்கிநிற்பன திருக்கோயில்களாகும். இந்நிலையில் கிரியைகள்யாவற்றிற்கும் அடித்தளமாக விளங்குவன திருக்கோயில் அமைப்புக்களேயாகும். இத்தன்மைகளை மனதிற்கொண்டு திருக்கோயில் அமைப்புகள் பற்றிச் சற்று விரிவாக நோக்குவோம்.

சிவாகமங்களில் திருக்கோயில் அமைப்பு விதிகள்

தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் அண்மைக்காலங்களில் உலகநாடுகள் எங்கணும் சிவாகமங்கள் கூறும் திருக்கோயில் பண்பாடு இப்பண்பாட்டுடன் இணைந்த வழிபாட்டு அம்சங்கள் திருக்கோயில் மரபுகள் என்பன பரந்து செல்லுகின்றன. இந்நிலையில் வழிபடுவோர்களின் மனநிலை வெளிப்பாடுகளின் தன்மையில் முழுநிலைக்கேற்ற தன்மைகளை பெறுகின்றதும், பெறவேண்டிய தன்மைகளையும் வெளிக் காட்டி நிற்கின்றன.

சிவாகமங்கள் சிவனை மையமாகக் கொண்ட திருக்கோயில் அமைப்பு, பரிவாரங்கள், மற்றும் கிரியைகளையே விதிகள் கூறுகின்றன. இந்நிலைகளை மனதில் இருத்தியே சிவனை ஒத்த தன்மையில் ஏனைய தெய்வங்களை பிரதான தெய்வமாக பிரதிஷ்டை செய்து வழிபடும் மரபுகள் காணப்படுகின்றன. இவ்வகையில் புதிதாக அமையும் சிவனது அல்லது ஏனைய தெய்வங்களது கோயிலின் விரிவுகளோ அவற்றில் முழுமைபெறச் செய்யும் சந்தர்ப்பங்களிலே திருக்கோயில் அமைப்புவிதிகள் பற்றிய ஐயங்கள் தோன்றுகின்றன. அவ்வய்யங்களைத் தெளிவு படுத்துவன சிவாகமங்களேயாகும். எனவே திருக்கோயில் பற்றி முழுமையாக அறிந்து கொள்வதற்கு ஆகம அறிவு இன்றியமையாததாகின்றது.

சிவாகமங்கள் கூறும் கிரியாபாதத்தில் கிராம நகர

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆலய அமைப்புகள் விரிவாகக் கூறப்படும் பகுதிகள் கர்ஷணம் என்னும் பகுதியாகும். இக்கர்ஷணம் பற்றி காரணாகமம் (2.3), காமிகாகமம் (I.11-14), சுப்ரபேதாகமம் (I.25), அஜிதாகமம் (I.7), அம்சுமத்பேதாகமம் (78), அம்சுமத் காசியபம் (I), கிரணாகமம் (III.24) ஆகியன கூறுகின்றன.

இவற்றிற்கு மேலாக அஜிதாகமம் (கிரியாபாதம்,6) சேத நிர்தேசபடலம் பற்றிக்கூறுகின்றது. சிவாகமங்கள் கிராம நகர ஆலய அமைவுகள் யாவற்றிற்கும் மேலாக சிவலிங்கம் ஸ்தாபனம் செய்யத்தக்க பிரதேசங்களையே மையப்பொருளாகக் கொண்டு விளக்கம் அளிக்கின்றன. இது பற்றி விளக்குகையில்;

'லிங்கஸ்தானபத்திற்கு ஏற்ற இடத்தினை அடுத்ததாகக் கூறுகின்றேன். மேரு, மந்தரம், கைலாசம் ஆகிய மலைகளின் உச்சியிலோ அல்லது மலைச்சரிவு, பீடபூமி ஆகியனவற்றிலோ நீலம், ஸ்வேதகிரி முதலிய கல்முனைகளிலோ, நிஷதம், ஹேம கூடம், ஹிமகூடம், மஹாகிரி, விந்தியம, மலயம், சஹ்யம, ரைதவம், ஸ்ரீபர்வதம், தேவகிரி, மஹேந்திரம், கந்தமாதனம் முதலிய எல்லா மலைகளிலும், புண்ணியங்களிலும், கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நர்மதா, சிந்து, சோணா ஆகிய நதிகளின் இருமருங்கிலும், காவேரியின் கரையிலும் அல்லது இவைகள் எல்லாவற்றிலும், புண்ய க்ஷேத்திற்கு சமீபத்திலும், எல்லாப்புண்ணிய க்ஷேத்திரங்களிலும் அந்த க்ஷேத்திரத்தை நோக்கியம் அவிமுக்தம் முதலான எல்லா புண்ணிய ஸ்தானத்திலும், முன்பு லிங்கம் இருந்தாலும் பிராகாரங்கள் இரண்டிற்கும் நடுவிலும் அழகிய தோட்டங்களிலும் சித்தக்ஷேத்திரங்களிலும், மகிழ்வளிக்கின்ற முனிவர்களின் ஆச்சிரமத்திலும், வானப்பிரஸ்த ஆச்சிரமத்திலும், மகிழ்வளிக்கின்ற பரந்த குமுதமலர், தாமரை இவைகள் நிறைந்த பரந்தநீர்நிலைகளிலோ, மிகமென்மையான இளம்புற்களினை உண்ணுவதில் கட்டுண்டதும் எப்பொழுதும் உற்சாகத்தோடு மான்கள் வசிக்கின்றதுமான பூமியிலோ, சிவந்த குமுதம், தாமரை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவைகளினால் நன்கு அலங்கரிக்கப்பட்ட புண்ணிய நீர் நிலைக்கு அண்மையிலோ, பழங்கள், பூக்கள் இவைகளின் பாரத்தினால் நெருங்க விளங்கும் மரங்களோடு எப்பொழுதும் ஒன்றுசேர்ந்து விளங்கும் இடத்திலோ, எங்கு மரம் கொடிகளின் புதர்கள் பூக்களுடன் கூடியவைகளாகவும் மென்மையான நிழல்களோடு கூடியவைகளும், மென்மையான பழம், துளிர் இவைகளுடன் கூடியவைகளும், கவரப்பட்டு புஷ்டியான பறவைகள் எப்பொழுதும் கட்டுண்டு இருப்பவைகளும், மக்களால் அடையப்படுகின்றவைகளுமான இடங்களிலோ, தங்கி இருக்கின்ற மரக்கிளைகளில் மலர்ந்த பூக்களின் ஒளியினால் அழகிய தூய வண்டுகள் விளங்குகின்றதும், மயில்கள் அகவுகின்றதும், தர்ப்பை (குசம்) நெல் இவைகளோடு கூடியதும், மரத்தின் அடியிலே நன்கு நித்திரை செய்கின்றதும், விளிப்புடன் கூடியதுமான ஒரு மண்டலம் வளங்குகின்றதுமான இடத்திலோ, மலர்ந்த தாமரைகள் விளங்குகின்ற இடத்திலோ, அசைகின்ற மென்மையான குசப்பல்லினால் அழகுபொருந்தியதும், மான் கூட்டங்கள் உயர்த்திய வாயோடு விளங்குவதானல் அழகானதுமான இடத்திலோ, அசைகின்ற துதிக்கைகளையுடைய பெரிய பலம் பொருந்திய பிளிறல்களோடும் பாதச்சுவடுகளோடும் கூடிய அழகுபொருந்திய இடத்திலோ, அன்னச்சோடிகளினால் ஒன்று சேருகின்ற அழுக்கற்ற நீர்நிலையாகிய சரஸ்களிருக்கும் பகுதிகளிலோ எல்லா இட்டசித்திக்காகத் தேசிகர்களால் சைவலிங்கம் ஸ்தாபிக்கத்தகக்கது என விவரிக்கின்றது.

இது பற்றி தீப்தாகமமும் (78.3-13) ஒன்றுபட்ட கருத்தாகக் கூறுகின்றது. மேலும், லிங்கஸ்தாபனத்திற்கு விலக்கவேண்டிய தேசத்தை அஜிதாமம் கூறுகையில்,

எங்கு காட்டுத்தீயினாலோ, இடியினாலோ மரங்கள் இறக்கின்றனவோ, எங்கு முள் நிறைந்த மரங்கள், வியாதியுள்ள மரங்கள் உள்ளனவோ, எங்கு வேப்பமரம், விஷமரம், கரஞ்சமரம், கங்கோலமரம், அவ்விதமே துர்நாற்றமுள்ள பிரம்மதண்டீ என்பன உள்ள அந்த தேசத்தை விலக்க

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேண்டும். எங்கு கபா லங்கள் இருக்கின்றனவோ, எங்கு பாம்புகளும், விஷஜந்துக்கள் இருக்கின்றனவோ, எங்கு கரையான் மிகுந்து காணப்படுகின்றதோ, எங்கு விதைத்த பொருள் வளரவில்லையோ, எங்கு காய்ந்த கொடிப்புதர்கள், நன்கு பழுதடைந்த மலைப்பகுதிகள், எங்கு மிக ஆழமாகத் தோண்டியும், நிலக்கீழ் நீர் காணப்படவில்லையோ, பாஷாணங்கள், கூழாங்கற்கள், எங்குநிறைந்து காணப்படுகின்றனவோ, எங்கு நீண்ட காலத்திற்கு முன்பாயினும் சண்டாளர், வேடர்கள் வசித்த இடத்திலோ, எங்கு நதியல்லாது பிளக்கப்பட்ட மரங்களுடன் விளங்குகின்றனவோ, அந்த இடத்தினை லிங்கஸ்தான கர்மாவிற்காக அறிவாளியானவன் விலக்கவேண்டும் எனக் கூறுகின்றது. இது பற்றிய விபரங்களை சுப்ரபேதாகமும் (I.25,33-36) கூறுவது மனங்கொள்ளத்தகக்து.

காமிகமும் இது பற்றிய விளக்கங்களைக் கூறுமிடத்து காலநிர்ணயம் பற்றி காலவிதி படலமும் (I.6), சகுனம் பற்றிய நிகழ்வு பற்றி நிமித்தபரீக்ஷாவிதியும் (I.7), கூறிவிளக்குவது மனங்கொள்ளத்தக்கது.

கிராம நகர பேதங்கள்

சிவாலயங்கள் அமைக்கத்தக்க இடங்களை விளக்கமுற்படும் சிவாகமங்கள் கிராம, நகரங்களின் அமைவிடத்தில் திருக்கோயில்கள் பற்றியே வர்ணிக்கின்றன. அத்தகைய அமைவிடத்தைக் காரணாகமம் தருகையில் (I.3)

அக்ரஹாரம், கிராமம், நகரம், ராஜதானி, பட்டணம், குட்டிமம் ஆவிகம், சேனாமுகம்,

எனக்கூறி அவைப்பற்றிய விளக்கங்களைத் தெளிவுபடுத்துகின்றது. சுப்ரபேதாகமம் (I.23), கிராம்மம், நகரம் பட்டணம், கர்வடம், புரம், கேடகம், குடிகம், சிபிரம், ராஜதானி, சேனாமுகம் எனக்கிராமமாகக் கூறப்படுகின்றது.

எனக்கூறி விளக்கமளிக்கையில்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1. கிராமம் :

இவை சுமார் 15 பகுப்புக்காக மண்டன கிராமம், சதுர்முககிராமம், மங்கள கிராமம், விஸ்வேச கிராமம், நித்தியமங்களகிராமம், கர்வடகிராமம், வஸந்தகிராமம் என்கன முதலிய பெயர்களில் காணப்படுகின்றன.

2. நகரம் :

பல்வேறு தொழிற்சாலைகளும், அரசாங்க நிர்வாக மாவட்டத்தலைமை அலுவலகங்களும், கலைச்செல்வங் களும், காவல் நிலையங்களும் கூடிய மாவட்டத்தலை நகரமாகும்.

3. பட்டணம் :

நதிகள், கடற்துறைமுகங்கள், வியாபாரத் தலைமை நிலையங்கள், கருவூலங்கள், ஆபரணத் தொழிற்கூடங்கள், நெசவுசாலைகள், அயல்நாட்டுவர்த்தகர் தங்குமிடங்கள், மாவட்டத்தலைமை அதிகாரிகள், சுங்க அதிகாரிகள் தங்கு மிடங்களுடன் கூடியநகரைச் குறிக்கும்.

4. கர்வடம் :

சுமார் 500 விவசாயத் தொழில் செய்யும் குடும்பங்க ளும், ஆறு, காடு, மலை இவைகளின் சமீபத்தில் உள்ளதுமான இடமாகும்.

5. புரம் :

இது சாமான்யமாகவுள்ள சுமார் 200க்கு மேற்படாத கூலி வேலைசெய்யும் தொழிலாளர்கள் வசிக்கும் இடம்.

6. கேடம் :

ஆற்றங்கரை, மலையுச்சி இவைகளில் பிரிந்து பிரிந்து குடிசைகட்டிவாழும் மக்களின் இருப்பிடம்.

7. குடிகம் :

இது தாழ்ந்த குடிமக்கள் என்று முன்னாளில் கருதப் பட்டு வந்த ஹரிஜனங்கள் வசிக்கும் சேரிகளமைந்த இடம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

8. சிபீரம் :

எப்பொழுதும் நாட்டுப்பாதுகாப்பிற்காக யுத்த வீரர்களைச் சேர்த்தும் தயார்செய்வித்தும் சேனாமுகத்தின் சுற்றுப்புறங்களில் வைக்கப்பட்டிருக்கும் இடமாகும்.

9. ராஜதானி :

அரசருடைய மாளிகையும், மற்றும் மந்திரிகள், பிரதானிகள், சேனாவீரர்கள், பாதுகாப்புள்ள கோட்டை கொத்தளங்களுடன் சுமார் இரண்டு லக்ஷம் ஜனத் தொகைக்கு மேற்பட்ட நால்வகை ஜாதியினரும் வாழுமிடம்.

10. சேனாமுகம் :

துர்க்கம், நாட்டின் பாதுகாப்பிற்காக உள்ள நான்கு பக்கங்களிலும் கோட்டைகள், பொறியியல்யந்திரங்கள், யுத்ததளவாட உற்பத்திசாலைகள், யுத்தவீரர்கள் பயிற்சி பெறுமிடங்கள் முதலயவற்றையுடைய இராஜதானியை அடுத்துள்ள இடமாகும்.

எனத்தெளிவுபடுத்துகின்றது. காரணாகமம், அக்ரஹாரம், குட்டிமம், ஆவிகம் என்பவற்றினைக் கூறுகையில்,

1. அக்ரஹாரம் :

அரசனுடையதும், மக்களுடையதுமான முக்கிய இருப் பிடத்தொடர். கிழக்கே சிவன் கோயில், மேற்கே பெருமாள் கோயில் அமைந்த இருமருங்கு அந்தணர் வீதி.

2. குட்டிமம் :

அரசனின் மாளிகையோடு கூடியதும் தனியாக நன்மக்களுடையதும் அவர்களுடைய செய்யத்தக்க செயல்களுக்குரிய அதிகாரிகளுடையதுமான விதிவிடம் குட்டிமம் எனப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

3. ஆவிகம் :

யானைகள், பலரதங்கள் என்பன இருக்கும் சேனா முகத்திற்கு அமைந்த இடமாகும், எனக்கூறுகின்றது.

இத்தகைய அமைவிடங்கள் அமைத்தக்க பூமியை கர்ஷணம் செய்து வாஸ்து விந்யாஸம் செய்தபின் ஆலயம் அமையத்தக்கதாகவுள்ள இடம் நிறம், மணம், ருசி என்பவற்றினால் சோதித்து வகைப்படுத்தப்படுகின்றது.

பூமியானது அதன் கண்ணுள்ள மரங்களாலும், செடி காடிகளாலும் அதில் வாசம்செய்யும் மிருகங்கள், பக்ஷிகளாலும், மண்ணின் நிறத்தாலும், வாசனையாலும், ருசிகளாலும் சோதிக் கத்தக்கது.

எனச் சுப்ரபேதாகமம் கூறுகின்றது. பூமியை நிமித்த பரீக்ஷை மூலமாக சகுனங்கள் அவசகுனங்கள், சோகத்தைக் காட்டும் சகுனம், சகுனத்தையிட்டு செய்யத்தககன எவை எனும் விபரங்களை காமிகாகமம் தெளிவுபடுத்துகின்றது. தொடர்ந்து சுபசகுனம் பெறபட்டதாயின் பூமியின் பரீக்ஷை செய்யவேண்டும் என பிவரித்துப் பன்னிரெண்டு வித பூமிகளாக பூமிலக்ஷணங்களைக் காமிகாகமம் தெளிவுபடுத்துகின்றது. அந்நிலையில் பூமியின் குணமானது சைவம், பிரம்மம், வைக்ஷணம், ஐந்திரம், ஔக்ஷம், பௌதிகம், ஆசுரம், பைசாகம், ராக்ஷசம், வாயவ்யம், வாருணம், ஆக்னேயம் எனப் பன்னிரெண்டாகப் பகுக்கப்படுகின்றது. அவையானவன,

1. சைவபூமி :

கோங்குமரம், மருது, அரசு விளா, அசோகம், ஆச்சா மரம், நிலத்தாமரை, துளசி, அறுகு, விஷ்ணு கிராந்தி, எலிக்காதுக்கீரை, இலவு, மலைநன்னாரி, புறா, கிளி, அன்னம் இவைகளால் வியாபிக்கப்பட்டது அவற்றைத்தரும் சைவீபூமியாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

2. பிரம்மபூமி :

வில்வபத்திரம், முருக்கு, விஸ்வாமித்திரம், நாணல், மான், நல்ல வாசனையுள்ள ஹோத்திரவியங்கள், அடைந் திருப்பதும் சுபத்தைத் தருவதுமானது பிரம்ம பூமியாகும்.

3. வைஷ்ணவீ பூமி :

தும்பைச்செடி, புளியமரம், புங்கமரம், மூங்கில், பருத்தி, எருக்கு, செம்பருத்தி, அன்னப்பக்ஷி, சாமான்யபக்ஷி, மிருகங்கள், முள்ளில்லாத மரங்களோடு கூடியதும், மனிதருக்கு சூரத்துவபராக்கிரமங்களைக் கொடுப்பதுமான பூமி விஷ்ணு பூமியாகும்.

4. ஐந்திரபூமி :

வாழை, பலா, மா, சுரப்புன்னை, மகிழமரம், பாதிரிமரம், நொச்சி, நெல்லி, கருநெய்தல் இவைகளாலும் வைசியர், சூத்திரர்களாலும் பரந்திருப்பது ஐந்திர (இந்திரன்) பூமியாகும்.

5. ஔக்ஷபூமி (பசுபூமி) :

பாதிரி, அகில் இவைகளின் வாசங்கள் நிறைந்ததும், தன தான்யங்களின் சம்பத்தைத் தருவதும், அழிஞ்சல் விருக்ஷங்களாலும் புன்னை, கீரிப்பிள்ளை, முயல், உடும்பு, சகோரபக்ஷி, செந்நாய் இவைகளில் பரந்திருப்பதும், ஜனங்களுக்கு சம்பத் தைப்பூர்த்தியாகத் தருவதாகவும், சுகத்தையும், வீரத்தையும் தருவதுமாக உள்ளது ஔ)க்ஷ (பசு) பூமியாகும்.

6. பூதபூமி :

பெருநொச்சி, குருக்கத்தி, அறுகு, அழிஞ்சில், முருக்கு, மல்லிகை, அலரி, இலுப்பைகளாலும், அவ்வாறே விபூதி மணங்க ளோடு கூடிப்பரந்திருப்பதும், மனிதர்களுக்கு உணவையும் புஷ்டியையும் தருவதாக உள்ளது பூதபூமி யாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

7. ஆசுரபூமி :

செராமரம், பெரியமரம், துஷ்டஜந்துக்கள், வெங்காயம், வேடர், மருதைமரம், பருந்து முதலிய துஷ்ட ஜந்துக்களோடும் கெட்டமணங்களோடும் கூடியது யுதத்தைத் தருவதானது அசுரபூமியாகும்.

8. பைசாசபூமி :

இலவமரம், மகிழமரம், தான்றிமரம், நறுவிலி மரங்களாலும், கழுதை, ஒட்டகம், பன்றி, நரிகளாலும், சண்டாளர், வேடர்களாலும் பரந்திருப்பதும், துர்கந்தமுள்ளதாகவும், சவிட்டுநிலமாகவும் இருப்பது எல்லா சாத்திரங்களாலும் எல்லா நாசத்தோடும் கூடியது பைசாசபூமியாகும்.

9. ராக்ஷதபூமி :

சண்டாளம், விஷம், திருடர், தலைநோய் முதலானவை களாலும், மிளகு, கூழாங்கல், பரிமள வஸ்துக்களாலும் நிறைந்து குறைவைத் தருவது ராக்ஷதபூமியாகும்.

10. வாயுபூமி :

குள்ளநரிக் கூட்டங்களால் நிறைந்து சுவர்க்கோழி, பருக்காங்கற்களோடு கூடியதும், துக்க நிர்ப்பாக்கியத்தைத் தருவது வாயுபூமியாகும்.

11. வருணபூமி :

பாக்கு மரங்களால் சூழப்பட்டு ஸமஸ்த சித்தியைத் தருவது வருணபூமியாகும்.

12. ஆக்னேயபூமி :

சதுரக்கள்ளி, நறுவிலி முதலானவற்றோடும், முறட்டு பருக்காஙகற்களோடு கூடியதும், சவட்டு நிலமாயும் தண்ணீரில்லாததாயும் இருந்து எல்லாவற்றையும் கெடுப்பது ஆக்னேய பூமியாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எனத் தெளிவுபடுத்துகின்றது இத்தகைய பூமிகளில் சிவத்தின் பிரதேசத்தில் சிவபூமியும், விஷ்ணுவின் பிரதேசத்தில் விஷ்ணுபூமியும், பிரம்மன்ய பிரதேசத்தில் பிரம்ம பூமியாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு பாகுபாடு செய்யப்படும் குணங்களால் உணரப்பட்ட வாழ்விடங்களுக்குரிய பூமியானது அநூபம், ஜாலங்கம் என இருவகைப்படும் என காமிகம் (I.11) வகுத்துக் கூறுகின்றது. மேலும் வாழ்வதற்கு இயைபான பூமியானது வெண்மை, சிவப்பு, மஞ்சள், கறுப்பு எனும் நான்கு வகைப்படும் எனவும்: இம்மண் ருசி, மணம் இவைகளால் சோதிக்கப்பட்டு நல்லமல்லிகை, புன்னை, தாமரை, நெல், பாதிரி முதலிய வாசனையுள்ளது உயர்ந்தது. எல்லாத் தானியங்களும் விளையக் கூடியது தேன், வெல்லம் எண்ணைச்சிக்கு, பிணம் முதலிய மணமுள்ளது நீக்கத்தக்கதெனச் சுப்ரபேதாகமம் கூறுகின்றது.

பூமி சருணபரீக்ஷை

பூமியைப் பள்ளம் செய்து அதேமண்ணைக்கொண்டு அந்த பள்ளத்தை நிரப்ப மண்மிகுதியானால் உத்தமம், சரியாக இருந்தால் மத்திமம், குறைந்தால் அதமம் என்றும் அதமம் பூமியை எடுக்கக்கூடாது.

ஜலபுஷ்பபரீக்ஷை

இத்தைகய பூ சருணம் பெறப்பட்டபூமியல் ஓர் பள்ளம் செய்து குடங்களில் பூக்களிட்ட ஜலங்கொண்டு அந்த புஷ்ப ஜலத்தை அப்பள்ளத்தில் ஜலத்தைவிட்டால் அந்த ஜலம் அடங்கிய குமிழியுடன் வலமாகச் சுழன்றால் சிறப்பாகும். புஷ்பம் நிமிர்ந்திக்குமாயின் மிகச் சிறப்பு.

அங்குரபரீக்ஷை

ஜலபுஷ்பபரீக்ஷயில் மிகச்சிறப்பான பூமியில் கடுகு அல்லது எள் விதைக்கப்பட்டு முளையானது முன்னிரவிற் சிறிதாக முளைக்குமாயின் அதுமங்களகரமான பூமியாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எனக் காமிகாகமம் (I.11) தெளிவுபடுத்துகின்றது. இவ்வாறான பரீக்ஷைகளுக்குட்படுத்தப்பட்ட பூமியில் எடுத்த பூமியில் அடுத்ததாகச் செய்யவேண்டியது வாஸ்து விந்யாஸமாகும். அதற்கு முன்னதாகச் செய்யவேண்டிய கிரியை பிரவேசபலியாகும்.

பிரவேசபலி

கிரகித்த பூமியினை ஒன்பது பாகமாக்கி பிரம்மஸ்தானம் முதல் ஒன்பது சந்திகளிலும் இந்தப் பூமியில் வசிக்கினற பூத, பிசாச, ராக்ஷஸகணங்கள் யாவும் சீக்கிரமாகத் தாமாகவே போக வேண்டும். இந்தப் பூமியை வாஸ்துவிற்காக எடுக்கப்போகிறேன் எனப்பிரார்த்தித்து தயிர், நெய், பலகாரம் இவைகளோடு கூடிய சாதங்களால் அத்தேவதைளுக்குப் பலியிட்டு சங்கீத வாத்திய வேதகோஷங்களால் கோஷிப்பிக்க வேண்டும் என காமிகாகமம் (I.12) தெளிவாகக்கூறுகின்றது. இவ்வாறான நிகழ்வுகளின் பின்பூமியை கிரகித்து (காமிகாகமம் I.13) உழவேண்டும். (காமிகம் (I.14) இவ்வாறு பூமியை உழுகின்றதையே கர்ஷணம் எனவும், கர்ஷண விதி எனவும் பூமியை சோதித்து எடுப்பது முதல் உழுவது வரையாக காமிகாகமம் (I.14) காரணாகமம் (II.3) சுப்ரபேதாகமம் (I.25) அம்சுமதாகமம் (78) அம்சுமத் காசியபம் (1) அஜதம் (க்ரியா பாதம் 7) கிரணாகமம் (III.24) ஆகியன மிக விரிவுபடுத்திக்கூறுகின்றன.

கர்ஷணம் எனும் உழுதலின்போது கலப்பைமுறிதல், பயிறு அறுதல் முதலியன ஏற்பட்டால் அதற்குப் பிராயச்சித்தமாக சாந்திஹோமம் செய்யவேண்டும் என காமிகாகமம் (I.14) சுறுகின்றது. மேலும், உழுதபிரதேசத்துப் புற்களை பசுக்களை மேயும்படியும், பசுக்களை அப்பிரதேசங்களில் தங்கும் படியும் செய்யவேண்டும் எனவும் விபரிக்கின்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சங்குஸ்தாபனம்

உழப்பட்ட பூமியைச்சமப்படுத்தி நடுவில் கட்டையடித் தலே சங்குஸ்தாபனமாகும். இத்தகைய சங்கு (மரக்குச்சி) அதுஸ் தாபிக்கத்தக்க இடம், அளவு கோல் செய்யும் மரம், சங்குவின் பிரமாணம், அளவு, மண்டல உருவம், சங்குவின் தொகை சங்கு வில் ஊசி நாட்டிப் பூஜை செய்யும் முறைமைகள், பின்னர் சங்கு ஸ்தாபனம் என்பன பற்றி காமிகாகமம் (I.15), காரணாகமம் (I.3), மிருகேந்திரம் (கிரியாபாதம் 7), அஜிதாகமம் (கிரியாபாதம், 9) என்பன விரிவுபடுத்தித் தெளிவுபடுத்து கின்றன.

இவ்வாறாக சங்குஸ்தாபனம் செய்யப்பட்ட இடத்தில் அயனங்களின் போக்குகளைக் கழித்து காலை மாலை சூரிய நிழல்களைக் கொண்டு திக்கு நிர்ணயம் பெறப் படுகின்றது.

திக்கு நிர்ணயம் செய்யப்பட்ட பிரதேசத்தில் அளவு கோல்களைக் கொண்டு பகுத்து அதனுடைய ஆயாதிப் பொருத் தங்களைப் பெறும் தன்மைகளை காரணாகமம், காமிகாகமம் ஆகியன கூறுகின்றன. அஜிதாகமம் கிராம நகர தண்ட அளவுப் பிரமாணங்களினைத் தெளிவுபடுத்திக் கூறுகின்றது.

வாஸ்துவிந்யாஸம்

சிவாகமங்கள் எவ்விதம் பூமியைப் பரீக்ஷித்த பெற்றுக் கொள்வதற்குரிய படிமுறைகளைக் கூறுகின் றனவோ அதே போன்று காசியபசில்பம், மயமதம், வாஸ்து வித்யை முதலான சாஸ்திர நூல்களும் கூறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சிவாகமங்கள் பதவிந்யாஸம் எனும் தன்மையில் பூமியின் பிரிப்புக்களை பதங்களின் எண்ணிக்கையால் வேறு படுத்திக்கூறுகின்றது. இதனடிப்படையில் பூமியானது32 வகுக்கப்படுகின்றது. அவையாவன,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1.	1	பதம்	சகளம்
2.	4	பதங்கள்	பேசகம்
3.	9	பதங்கள்	பீடம்
4.	16	பதங்கள்	மஹாபீடம்
5.	25	பதங்கள்	உபபீடம்
6.	36	பதங்கள்	உக்ரபீடம்
7.	49	பதங்கள்	ஸ்தண்டிலம்
8.	64	பதங்கள்	மண்டூகம் / சண்டிதம்
9.	81	பதங்கள்	பரமசாயிகம் / பரமீசம்
10.	100	பதங்கள்	ஆசனம்
11.	121	பதங்கள்	ஸ்தானீயம்
12.	144	பதங்கள்	தேசீயம்
13.	169	பதங்கள்	உபயசண்டிதம்
14.	196	பதங்கள்	பத்ரமஹாசனம் / பத்ராசனம்
15.	225	பதங்கள்	பத்மகர்பம்
16.	256	பதங்கள்	த்ரியுதம்
17.	289	பதங்கள்	வ்ருத்தபோகம்
18.	324	பதங்கள்	கர்ணாஷ்டகம்
19.	361	பதங்கள்	கணிதம் / கணிதபாதகம்
20.	400	பதங்கள்	சூரியவிசாலகம்
21.	441	பதங்கள்	சுசம்ஹிதம்
22.	484	பதங்கள்	சுப்ரதீகாந்தம்
23.	529	பதங்கள்	விசாலம்
24.	576	பதங்கள்	விப்ரகர்பம்
25.	625	பதங்கள்	விஸ்வேசம்
26.	676	பதங்கள்	விபுலபோகம்
27.	729	பதங்கள்	விப்ரதீகாந்தம்
28.	784	பதங்கள்	விசாலாக்ஷம்
29.	841	பதங்கள்	விப்ரபுக்திகம்
30.	900	பதங்கள்	விப்வேசசாரம் / விஸ்வசாரம்
31.	961	பதங்கள்	ஈஸ்வரகாந்தம்
32.	1024	பதங்கள்	இந்திரகாந்தம் என்பனவாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வாறு பகுக்கப்பட்ட பூமியில் வாஸ்து தேவதைகளுக்கு பலியிடும்கிரியை வாஸ்துசாந்தி எனக் கூறப்படுகின்றது. பரமசாயிகம் எனும் 81 பதங்கள் கொண்ட வாஸ்துமண்டலத்தில் நடுவில் இருக்கும் ஒன்பது பதங்கள் பிரம்மபதம் ஆகும் இந்தப் பதத்தில் ஆலயங்கள், மடங்கள், சபைகள், பிரம்மவிசாரம் செய்யுமிடங்கள் வேதாகமாத்யயனமண்டபங்கள் இவைகள் அமைக்கவேண்டும். இப்பிரம்மபதத்திற்கு வெளியில் இருக்கும் பதினாறு பதங்கள் தைவீகபதம் ஆகும். இதிலும் ஆலயங்கள், பொது நிலையங்கள், அக்ரஹாரங்கள் முதலியன கட்டப்படுதல் வேண்டும். தைவிகபதத்திற்கு வெளியிலுள்ள 24 பதங்கள் மானு ஷபதம் ஆகும். இதில் ஜனங்கள் வசிக்கும் வீடுகள், சாலைகள், வீதிகள், ராஜகிருதங்கள் முதலியன அமைதல்வேண்டும். அதற்கு வெளிச்சுற்றிலுள்ள 36 பதங்கள் பைசாசபதம் ஆகும். இதில் உட்பாதியில் வீடுகளும் தெருக்களும் அமைப்பதுடன் வெளிப் பாதியில் மயானம், துர்க்கைகோயில், குளங்கள், சலவை செய்யுமிடம், மத்ஸிய மாம்ச வியாபாரிகள் தங்குமிடம், வைத்திய சாலை, ஆயுதசாலை, கோட்டைகள் முதலிய அமைதல் வேண்டும். இவ்வாறு அமைக்கும் கிராமம், நகரம், பட்டணம் முதலியன அமைப்புகள் நூறு தண்ட அளவு முதல் 10,000 தண்ட அளவு வரையாக்ச கூறப்படுகின்றன.

(படம்1)

சிவாகமங்கள் கூறும் திருக்கோயில் அமைவானது மக்கள் வாழ்விடத்தைப் புறம் தள்ளாது பல்வேறுபட்ட சமூக அமைவுகளின் மத்தியில் திருக்கோயிலை மையமாகக் கொண்ட நகரம் போல விளங்க வேண்டிய முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றன. இதனடிப்படையில் திருக்கோயிலுக்கான தனித்துவம் காணப்படினும் கிராமம், நகரம், பட்டணம், வீடுகள், வீதிகள் எனும் அமைப்புக்களிலிருந்து திருக்கோயில் அமைவைப் பிரித்தெடுக்க முடியாத தன்மைகள் கிராம விந்யாஸ வீதிகள் மூலம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவாகமங்களில் சுட்டப்படுகின்றன. காமிகம் (I24) தண்டிகாவிதி படலம் மூலமாக ஆலயங்களை மையமாகக் கொண்ட கிராம, நகர, பட்டண அமைவுகளைப் பன்னிரெண்டு விதங்களாகக் கூறுகின்றது. அவையாவன. தண்டிகம், ஸ்வஸ்திகம், ப்ரஸ்தம், ப்ரகீர்ணம், சம்பத்கரம், பராகம், பத்மகம், ஸ்ரீபிரதிஷ்டிதம், ஸ்ரீவத்ஸம், வைதிகம், நந்தியவர்த்தம், கும்பம் என்பனவாகும்.

இவ்வாறு பன்னிருவகையாக அமைந்ததும் சாஸ்திரோக்தமாகக் கூறப்பட்டதுமான கிராமம் முதலானவைகளின் பன்னிருவகை உருவ அமைப்புகளுக்குரிய வீதி ஒழுங்குகளை காமிகாகமம் (I.25) கூறுகின்றது.

நகரம், கிராமம் முதலியனவைகளின் அமைவுகளில் ஆலயத்தை மையப்படுத்திய கிராம அமைவு தெளிவுபடுத்தப் பட்டது. மேலும், காமிகாகம் (I.26) ஒரு கிராமத்தில் தேவதைகளை ஸ்தாபிக்கத்தக்க ஸ்தானங்களைக் கூறுகின்றது. இந்தஸ்தான்ங்கள் வாஸ்து பத சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். இதனைக் காமிகம் (I.26) விளக்குகையில் பிரம்மதானத்திற்கு வாயுமூலையில் விஷ்ணுதானம் கூறப்பட்டது. மேற்குத்திக்கில், வாஸ்துவின் சூத்திரத்திற்கு வடக்குத் தேசத்தில் பிரமாவானவர் இருக்கவேண்டும். கிராமத்தின் மத்தியில் ஈசான் யத்திக்கு முதலான எட்டுத்திக்குகளிலும் சிவஸ்தாபனம் கூறப் பட்டது. விஷ்ணு உருத்திரரோடு கூடிய வாஸ்து சாதாரணம், பரமசிவத்தோடு கூடிய மற்றயாவும் இஷ்டம் போலாகும். இந்தச் சாத்திரத்தில் அவைகளின் ஸ்தானம் கூறப்படுகின்றது.

மேற்குத்திக்கிலும் கிழக்குத்திக்கிலும் அவ்வாறன்றிக் கிழக்கு வடக்குகளின் மத்தியிலும் சூரியஸ்தானமாகும். இந்திரருக்கும் அவ்விடத்திலேயே ஸ்தானமாகும். வாயுமூலையிலும், கிழக்குத்திக்கிலும் தெற்கு, தென்கிழக்கு,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தென்மேற்கு, சுக்கிரீவரென்கின்ற மேற்குத் திக்கு ஷண்முகருக்கிடம் கூறப்பட்டது. மேற்குத் திக்கிலும் தென்மேற்குத் திக்கிலும் கிழக்குத் திக்கிலும் சாஸ்தா வினிடம் கூறப்பட்டது. மேற்கு அல்லது தென்மேற்கி லாவது, வடமேற்கு வடக்குத் திக்குகளின் நடுவிலாவது வேறடத்திலாவது இந்த (காமிக) ஆகமத்தில் கணேசரின் ஸ்தானம் கூறப்பட்டது. தெற்கு அல்லது தென்மேற்கு அல்லது வாயுதிக்கு அல்லது இந்திரதிக்கின் நடுவிலாவது, தென்மேற்கு தெற்குப் பாகத்தின் நடுவிலாவது துர்க்கை ஸ்தானம் கூறப்பட்டது.

மேற்குத் திக்கில் லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய இருவரின் ஸ்தானம் கூறப்பட்டது. வடகிழக்கிலும், வடக்கிலும் அவற்றின் மத்தியிலும் சப்த மாதாக்களின் ஸ்தானமாகும். தென்கிழக்கில் மோடியின் ஸ்தானம். அவ்விடத்திலேயே காமதேவருக்கு இடமாகும். குளக்கரையிலாவது அதற்குப் புறத்திலாவது மற்றவிடத்திலாவது ஜ்யேஷ்டாதேவியின் ஸ்தானம் கூறப்பட்டது. மன்மதன் சூரியன் ஆகிய இருவருக்கும் ஷண்முகருக்குரிய இடம் (மேற்கு) கூறப் படுகின்றது. ஷண்முகருக்கு ஸப்தமாதாக்களுடைய (ஈசானம் / வடக்கு) ஸ்தானம் ஆகும். மற்றவர்களுக்கு இஷ்டம் போல் ஆகும்.

என விளக்கி தொடர்ந்து இத்தேவதைகளின் பூஜாபலன் கூறப்படுகின்றது. கிராமத்தை மையமாகக் கொண்ட ஆலய அமைவில் திருமால் (விஷ்ணு) சிவன் ஆகிய இருவரும் முக்கிய பங்கு வகிப்பதனை சிவாகமங்கள் எடுத்தி யம்புகின்றன. இதுபற்றி காமிகாகமம் (I.26) விளக்கிக் கூறுகையில், (கிராமத்தின்) வடகிழக்கில் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் உத்தமமெனக் கூறப்பட்டது. மற்றவிடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கமானது மத்யமமாகக் கூறப் பட்டது. கிராமத்தின் நடுவில் விஷ்ணுவின் ஸ்தானமானது உத்தமமாகக் கூறப்பட்டது. மேற்குத் திக்கில் மத்யமமாக

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வும் மற்றைய பிரதேசத்தில் ஸ்தானத்தில் அதமமாகவும் அறியத்தக்கது. எனக்கூறுவது மனங் கொள்ளத்தக்கது. இது பற்றிய விபரங்களை சுப்ரபேதாகமமும் (க்ரியாபாதம்.23) கூறுகின்றது.

திருக்கோயில் என்பது சாஸ்திரோக்தமான கலை யம்சங்கள் பல ஒன்றிணைந்து பிரிக்கமுடியாத அளவு ஒன்றுபட்டு விளங்குகின்றது. இந்தத் தன்மையை நோக்கு வோம்.

சிவாகமங்கள் கூறும் ஆலய அமைப்பு முறைமைகள் சிவாலய அமைப்பு முறைகளேயாம். அம்முறைமையில் மூல மூர்த்தியானது ஓர் சிவலிங்கத் திருமேனியேயாம். அம்மூர்த்திகளின் வகைகள், பற்றி சிற்பசாஸ்திரங்களும், சிவாகமங்களும் கூறிநிற்கின்றன. ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாதவாறே திருக்கோயில் அமைப்பும் காணப் படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இதனை மனத்துள் ளிருத்தி சிவாலய அமைவு பற்றி நோக்குவோம்.

திருக்கோயில் அமைப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள், ஸ்தானங்கள் என்பன பற்றி கர்ஷணவிதி என்பன பற்றி ஏலவே கூறியதை மனங்கொள்ளவேண்டும். அதன்படி பூபரீக்ஷை, சல்யோத்தாரம் என்பன நிகழ்ந்து அடுத்ததாக நிகழும் கிரியை இஷ்டிகாஸ்தாபனமாகும். இதனை ஆதயேஷ்டிகா ஸ்தாபம் அல்லது விதி என காமிகாகமம் (I.51), அம்சுமத் காசியப (I.4), அம்சுமத் ழேதாகமம் (25), காரணாகமம் (I.4), தீப்தாகமம் (80), சுப்ரபேதாகமம் (I.28), ஸ்வாயம்புவஆகமம் (49), அஜிதாகமம் (க்ரியாபாதம்.10) ஆகியன கூறுகின்றன. இதுபற்றி சிற்பசாஸ்திரங்களுள் காசியபசிற்பசாஸ்திரம் (I.4) வரிவாகக் கூறுகின்றது. இக்கிரியையானது ஆலயம் அமைய இருக்கும் பொருளினால் அதாவது செங்கல், கருங்கல், மரம் என்பனவற்றுள் ஆலயம் அமையும் பொருள் பற்றியதெளிவு இதனூடாகப் பெறப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதனையடுத்து நிகழும் கிரியை கர்பநியாஸம் ஆகும். திருக்கோயிலின் மூலமூர்த்திவைக்குமிடம், கோபுரங்களின் கால்கள் நிறுத்துமிடம், சபைகள், மடங்கள் ஆகியனவற்றின் ஈசானதிக்கு விமானங்களின் ஸ்தூபியின் அடிப்பாகம் ஆகியனவற்றில் கர்பநியாஸம் செய்யவேண்டும்.

காமிகாகமம் (I.31) பிவரித்துக் கூறுகையில், தங்கம், வெள்ளி, செம்பு முதலியவைகளில் ஏதாவது ஒன்றால் நல்ல கனமுள்ள தகட்டால் 25 அறைகள் கொண்டதாக ஒருமுழம் அல்லது அரைமுழ அளவில் ஒரு பேழை செய்து அதில் நவ ரத்தினங்களும், தங்கம் முதலிய உலோகங்களும் ஹரிதாலம், வீரம், பூரம், ரசம் முதலிய தாதுப் பொருட்களையும் எல்லா வகையான தானியங்களையும் எட்டு வகையான மண் களையும் ஒஷதிகளையும் மற்றும் அஷ்ட மங்களக் குறிப்புக்களைக் காட்டும் அடையாளப் பொருட்களையும் வைத்து பூஜித்தல் வேண்டும் எனும் சாரமமைந்த விதி யினை மிகவும் விரிவுபடுத்தித் தருகின்றது.

பிராஸாதம்

இதையடுத்து அமைவது விமானமாகும். விமானத் திற்கு அடித்தளமாய் அமைவது உபபீடமும் அதிஷ்டானமு மாகும். விமானம் என்னும் பிராஸாதத் திற்குரிய விதிகளைக் காரணாகமம் (I.7) கிரணாகமம் (III.25), காமிகாகமம் *(16, 50, 55)*, அம்சுமத்காசியபம் *(26-29, 31-40)*, தீப்தாகமம் *(6,9,63)*, சுப்ரபேதாகமம் (I.31), ஸ்வயம்பு வாகமம் *(5)* ஆகிய ஆகமங்கள் விளக்கம் தருகின்றன. இவ்விதியானது விரிக்க விரிக்க விரிந்து செல்லும் பரந்த பரப்புடையதும் சிற்ப சாஸ்திரங்கள் விரித்துரைக்கும் கலையம்சங்கள் நிறைந்தது மான தன்மையில் ஒருருப்பெற்று விமானமெனும் ஒருருவில் காட்சி தருகின்றது.

உபபீடமும் அதிஷ்டானமும்

திருக்கோயிலின் மூலமூர்த்தியோடு இணைபிரியா

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ததும் மனித இயல்போடு ஒப்பிடப்படுவதுமான பிரா ஸாதம் விமானம், ஸதனம், ஹர்மியம், வாஸம், மந்திரம், ஆலயம், நிலையம் எனும் ஒரு பொருள் சுட்டும் பல பெயர்களால் சிவாகமங்களும் சிற்ப சாஸ்திரங்களும் சுட்டு கின்றன. விமானம் என்பது பலவிதமான அளவை முறை களைத் தன்னகத்தே கொண்டதெனும் உயரிய கருத்தைத் தருவதோடு நன்கு அளந்து கட்டப்பட்டது எனும் பொரு ளையும் வி-மானம் எனும் சொற்பிரிப்பு வெளிப்படுத்து கின்றது. இதனூடாக இவ்வமைப்பினுள் பல விதமான அளவியல் முறைகள் உள்ளன என்பதையும் சுட்டி நிற்கின் றது. இத்தகைய சிறப்புடைய விமானம் உபபீடம் அதிஷ் டானம் எனும் இரு அடித்தளங்களை நிலமட்டத்தில் இருந்து பெற்று விளங்குகின்றது. இவ்வடித்தளங்களின் கீழ்ப் பகுதியே அஸ்திவராமாகும்.

உபபீட அமைப்புப் பற்றி காமிகாகமம், சுப்ரபேதாகமம் ஆகியன சிறப்பாகக் குறிப்பிட்டுக் கூறுகின்றன. உபபீடமெனும் கட்டட அமைப்பு விமானத்தின் ஒரு அங்கமாகப் பல சித்துவர்க்கங்களாக அமைகின்றது. இது உபானம், மஹாபத்மம், கம்பு, கண்டம், பட்டிகை, க்ஷுத்ரபத்மம், கபோதம், வாஜினம் எனும் அங்கங்களைக் கொண்டு இதிலேற்படும் கலையம்ச மாறுதல்களை உயர அளவுகளிலும் தம்முள் மாறுபடும் தன்மையில் திரியங்க, பஞ்சாங்க, சஷ்டாங்க, அஷ்டாங்க, பிரதிபத்திர, பிரதிசுந்தர, சௌபத்திர, கல்யாண காரிகா எனும் எட்டு உபபீடங்களின் வகைகளை மயமதம் சித்தரித் துக் காட்டுகின்றது.

உபபீடத்தின் மேல் அமையும் வர்க்கமே அதிஷ்டான மாகும். இதன் உயர அளவைகளை சிற்ப சாஸ்திரங்கள் தெளிவுபடுத்துகின்றன. காரணாகமம் ஸ்ரீகரம், லலிதம், பத்மம் எனும் மூன்று வகையுடையதாக அதிஷ்டானம் அமையும் எனக் கூறுகின்றது. அதிஷ்டானத்தை ஆதாரம்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தரணி, புவனம், பிருதுவி, பூமி, வஸ்த்வாதாரம், தராதளம், தலம், மசூரகம், குட்டிமம் எனும் ஒருபொருள் சுட்டும் பலபெயர்களை சிவாகமங்களும் சிற்பசாஸ்திரங்களும் சுட்டி நிற்கின்றன. சிற்பசாஸ்திரங்கள் அதிஷ்டானம் அறுபத்துநான்கு வகைப்படும் எனக்கூறுகின்றன. சிவாகமங்கள் பாதபந்தம், பிரதிபந்தம், பத்மபந்தம், பத்மகம், பத்மபுஷ்கலம் எனும் முக்கியமான வர்க்கங்கள் அடங்கிய நான்கு வகையான அமைப்புக்களைச் சுட்டி அவை நன்நான்கு பேதங்கள் உடையதாக ஒன்றோடொன்று தொடர்புபட்டு விளங்கும் வர்க்கங்களை உடைய அமைப்புக்களைக் காரணாகமம் கூறுகின்றது. இவை அரைப்புடைப்படையதும் பிராஸாதத்தின் வெளிப் புறத்தில் மாத்திரம் புடைப்புத்தன்மை உடையதாக மஹா மண்டபம் வரையாகத் தொடர்ந்து சென்று விளங்குவது குறிப்பிடத் தக்கது.

அதிஷ்டானத்தின்மேல் அமைவது பாதவர்க்கமாகும். இவ்வர்க்கம் வேதிகை, ஸ்தம்பம், கலசம், பலிகரம், வீரகாண்டம், போதிகை வரையாக அமையும். இவற்றுள் சுவராகவும் தூண்களுடனும், கோஷ்டங்களுடனும் அமையும்பகுதி இதுவாகும். இதன் ஒவ்வோர் அம்ச விரிவுகளையும் சிறப்பாகத் தூண்களின் கலைநுணுக்க விரிவுகளைச் சிவாகமங்களும் சிற்ப சாஸ்திரங்களும் சுட்டி நிற்கின்றன. இப்பாதவர்க்கத்தின்மேல் அமைவது பிரஸ்தரமாகும். இது உத்தரம், வாஜனம், கபோதம், யாளம் என்னும் அங்கங்களுடன் அமைகின்றது. அதன் மேல் வேதிகை, களம், ஹாரம், பத்ரநாசி, சிகரம், மஹாபத்மம், ஸ்தூபி எனும் கலசம் வரையாகக் கீழிருந்து மேலாக முறையே கலையம்சங்களுடனும் கலையழகுகளுடனும் ஒன்று சேர்ந்த வடிவமாக விமானம் அமைகின்றது. விதிகளுக்குட்பட்ட விமானத்தினது வடிவங்கள் ஒன்று சேர்ந்த அவற்றிற்குரிய வெவ்வேறு பெயர்களும் சுட்டப்படுகின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விமானங்களின் அமைப்பைக் கொண்டு கோயிலின் பெயர்கள் சுட்டப்படுகின்றன. கரக்கோயில் ஞாழக் கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக் கோயில், ஆலங் கோயில் எனத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் சுட்டப்படுகின்றது. விஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிசாலம், ஸ்கந்தகாந்தம், ஸ்ரீகரம், ஹஸ்திபிருஷ்டம், கேசரம் எனும் ஏழுவகைக் கோயில்களைச் சிவாகமங்களும், சிற்ப சாஸ்திரங்களும் சுட்டுகின்றன. இத்தகைய விமானங்கள் ஒன்று முதல் 16 தளங்கள் வரையாக அமையும் சிறப்புப் பற்றி காமிகாகமம் (I.61) கூறுகின்றது. கலையம்சங்களை விரிவு படுத்தி அவைபற்றி சிற்ப சாஸ்திரங்களும் கூறுகின்றன.

விமானத்தின் ஒன்றுமுதல் பதினாறு தளங்கள் வரையாக காமிகாகம் (I.61) விள்க்குகையில், முதலாவது தளம் சாதாரணமாக விளக்கப்பட்ட தன்மையிலிருந்து விரிவுபடும் தன்மைகளைச் சுட்டிக் காட்டுகின்றது. அவை முன்பு கூறப்பட்ட ஏழு விதமான கோவில்களை அடுத்து இரண்டு தளங்கள் உள்ளவை ஸ்வஸ்திக, விபுலசுந்தர, கைலாச, பர்வத, ஸ்வஸ்திகாந்த, கல்யாண, பாஞ்சால, விஷ்ணுகாந்த, சுமங்கல, காந்தார, ஹஸ்திபிரஷ்ட, மனோஹர, ஈஸ்வரகாந்த எனும் பதின்மூன்று வகைகளை உடையதாகச் சுட்டப்படுகின்றது. மூன்று தள பிராஸா தங்களை வர்ணிக்கையில் சாதாரண லட்சணங்களைக் கூறி அதன் விமான வடிவத்தை விமானாகிருதிகம், ஸ்வஸ்திகம், விமலாகிருதி, ஹஸ்திபிருஷ்டம், புராதனகஜபிருஷ்டம், பத்ரகோஷ்டம், சுமங்கலம், காந்தாரம், ஸ்ரீபோகமெனும் என்னும் ஒன்பது த்ரிதள பேதங்களினுடைய லட்சணங் களைக் கூறுகின்றது. நான்கு தள பிராஸாதங்களையும் சாதாரண லட்சணங்களோடு விளக்கி சுபத்ரகம், ஸ்ரீவிசாலக, பத்ரகோஷ் டம், ஜலாவஹம், விஜயம், பத்ரகூடம், மனோ கரம், ஆவந்திகம், தேவாஸ்பாதம் முதலான ஒன்பது நான்கு தள விமானங்களின் லட்சணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. இதேபோன்று ஐந்து தொடக்கம் பன்னிரெண்டு வரையான

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தளங்களையுடைய விமானங்களின் லட்சணங்களும் வர்ணிக்கப்படுகின்றன. அவற்றுள் பேதங்கள் சுட்டப் படவில்லை. எனினும் ஏழுதள பிராஸாதத்தை வர்ணிக் கையில் ஸர்வதேசிம் எனும் பேதம் சுட்டப்படுகின்றது. 12-16 தளங்கள் வரையான பிராஸாதங்கள் அமைப்பதில் விரிவான முறைகளும் சிறப்பம்சங்களும் சுட்டிக்காட்டப் படுகின்றன.

விமானத்தோடு ஒன்றுபட்ட தன்மையில் ஸ்தூபி எனும் பிமானத்தின் கலசம் பொருத்தத்தக்கதாக அதனுள் அமையும் மரங்கள் பற்றிய விபரங்களை மூர்த்தோஷ்ட காவிதி மூலமாகக் காமிகாகமம் (I.61), காரணாகமம் (I.10) .தெளிவுபடுத்துகின்றன.

விமானத்தின் வடிவமைப்பில் அவற்றின் தோற்றம் திராவிடம், நாகரம், வேஸரம் எனும் மூன்று பேதங்கள் சிறப்பாகப் பேசப்படுகின்றன. இவை முறையே சதுரம், எண்கோணம், வட்டம் ஆகிய வடிவங்களையுடைய பிராஸாதத்தின் அமைப்பைச் சுட்டுவனவாகவும் ஸாத்விகம், ராஜசம், தாமசம் எனும் குணவியல்புகளை உடையன வாகவும் சிவாகமங்களும் சிற்ப சாஸ்திரங்களும் சுட்டுகின்றன. இத்தகைய மரபுநூல்கள் தேசம் என இமயமலை முதல் கன்னியாகுமரி வரையான பாரதவர்ஷத் தில் இமயம் முதல் விந்தியமலை வரையான பிரதேசம் நாகர விமானமுடையன என்றும் விந்தியமலை முதல் கிருஷ்ண வேணி நதி வரையான பிரதேசம் திராவிட விமான முடையன என்றும் கிருஷ்ணவேணி நதிமுதல் கன்னியா குமரி வரையானவை வேஸர விமானமுடையன என்றும் காமிகாகமமும், காசியப சிற்பசாஸ்திரமும் கூறுகின்றன.

நாகரம், திராவிடம், வேஸரம் என்னும் மூன்று பாணிகளினடிப்படையில் அமைப்பு எவ்விதம் அமையும் என்பதனைச் சுட்டுகையில் கண்டம் முதல் வுட்டமாக

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விமானம் அமைந்திருப்பின் அவ்விமானம் வேஸரம் என்றும், கழுத்து முதல் எண்கோணமாக விமானம் அமைந்திருப்பின் அது திராவிடம் என்றும், விமானம் முழுவதும் சதுரமாக அமைந்திருப்பின் அது நாகரம் என்றும் அழைக்கப்படுவதாக சுப்ரபேதாகமம் (I.31.38-40) கூறுகின்றது.

இவ்வாறான விதங்களைக் கூறப்பட்ட விமானங்களின் அமைவானது ஒரு தனித்த அளவு என்றோ, அல்லது ஒரு நிலையான அளவென்றோ கொள்ளப்படுவதில்லை. விமானத்தின் அல்லது மூலாலயத்தின் அளவானது மூர்த்தியோடு பிளவுபடாது நெருங்கியிருக்கும் அளவுமுறைகளைக் கொண்டதாக விளங்குவன. இவற்றினைச் சிற்பங்கள் பற்றிச் சிறப்பித்துக்கூறும் ஸகளாதிகாரம் (1) தெளிவுபடுத்துகின்றது. இதே தன்மைகள் விமான அமைப்பிலிருந்து மூர்த்திக்கும் கொள்ளப்பட வேண்டியதாகின்றது.

லிங்கத்தினுடைய தன்மையினாலும் கற்பக்கிரகமானது மூன்று விதமாகக் கூறப்படுகின்றது. நாகர விமானத்தில் நாகரலிங்கம் அதே போன்று வேஸர திராவிட விமானங்களில் வேஸர திராவிடலிங்கங்கள் என மூன்றுவிதமாகச் சுட்டப்படுகின்றது. இதைவிடப் பிரதிஷ்டையின் தன்மையில் லிங்க அமைப்புகள் யோகஜ ஆகம்த்தின் பிராஸாத விதி தெளிவுபடுத்துகின்றது.

நாகரம் ஆண்விமானம், திராவிடம் பெண்விமானம், வேஸரம் அலிவிமானம் என்றும் மூன்று வகையாக விமானம் கூறப்படுகின்றது. இவை முறையே நிற்பவை, இருப்பவை, படுத்தவை என்றும் வர்த்தமான (வளர்ந்துவரும்) லிங்கத்திற்கு நிற்கும் (நாகர) விமானத்தையே அமைக்கவேண்டும் என்பது விதி. இவற்றினை சிவாகமபரிபாஷா மஞ்ஜரீ சுட்டுகின்றது. மேலும், தெளிவுபடுத்துகையில் சிவன் முதலான லிங்கங்களிற்கு விமானத்தை இருப்பவையாகவே (திராவிடம்) அமைக்க வேண்டும் என்றும் த்ரைசிக

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

லிங்கத்திற்குப் படுத்த (வேஸர) விமானத்தைச் செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றது.

லிங்கத்தின் வகைகளுக்கு விமானத்தைக் கூறுகையில், ஆர்ஷ லிங்கத்திற்கு நிற்கும் (நாகர) விமானத்தையும் ஸ்வயம்பு லிங்கத்திற்கு இருக்கும் (திராவிட) விமானத்தையும் மானுஷம், ராக்ஷஸம், பாணம், காணபம் ஆகிய லிங்காகளிற்குப் படுத்த (வேஸர) விமானத்தையும் அமைக்கவேண்டும் என்றும் சதுராமாக லிங்கத்தின் பீடம் இருப்பின் அது ஸ்திதம் (நிற்பது) என்றும் வட்டமாக இருப்பின் ஆசனம் (இருப்பது) என்றும் எண்கோணமாக இருப்பின் சயனம் (படுத்திருப்பது) என்றும் அழைக்கப்படு கின்றமையை சிவாகம பரிபாஷாமஞ்ஜரீ தெளிவு படுத்து கின்றது.

பொதுவாக ஸாங்கம், உபாங்கம், ப்ரத்யங்கம் என்பன ஆகமங்களில் கூறப்படுவது மரபு. இதில் ஸாங்கம் என்பது முக்கியமான அங்கமாகும். விமானத்திலும் சிரம், ஸ்தூபி, களம், மஞ்சம், பாதம், அதிஷ்டானம் அங்கம் என்றும், கூடம் சாலை என்பன உபாங்கம் என்றும், நாஸி பஞ்சங்கம், ப்ரத்யங்கம் என்றும் கூறப்படுகின்றது. இதைவிட பூமியி லிருந்து ஸ்தூபி வரையானவை ஸ்தூலலிங்கம் என்றும், சூக்ஷ்மலிங்கம் சதாசிவம் என்றும் பலிபீடம் பத்ரலிங்கம் என்றும் மூன்று லிங்கங்கள் சுட்டப்படுகின்றன.

இவ்வாறாக விமானங்கள் அமைய இவையாவும் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு எனும் திக்குகளை நோக்கு வனவாகவே. அமையவேண்டுமென விதிக்கப்படும் அதே வேளை சிவலிங்க திருஷ்டி விசேஷத்தை காமிகாகமம் (1.4) கூறுகையில் மேற்குமுக சிவலிங்கம் மிகவும் சிறந்தது. அது இல்லையேல் கிழக்குமுக சிவலிங்கம் தெற்கு, வடக்கு முகமுள்ள சிவலிங்கம் புத்திமான்களால் சித்திவிடயத்தில் அங்கீகரிக்கப்படவில்லை. சாந்திகர்மம் முதலானவற்றில்

CC-0. In Public Domain. Cuddalore Collection: TN.

Digitization by eGangotri-South Center

வடக்குமுகலிங்கம் அங்கீகரக்கப்பட்டிருக்கின்றது. நிஷ்கள் மூர்த்தியாகிய லிங்கத்திற்கு ஒரு துவாரமுள்ள ஆலயத்தில் இவ்வித ஏற்பாடு மேரு முதலிய நான்கு துவாரமுடைய தான ஆலயத்திலும், நான்கு முகத்தையுடைய லிங்கத்தின் விஷயத்திலும் நான்கு த்வாரம் செய்யத்தக்கது. நான்கு துவாரமுள்ள இடத்தில் இவ்வேற்பாடானது இல்லை. எந்தத் திக்கில் மார்கம் இருக்குமோ அதனைக் கிழக்காகக் கொள்ள வேண்டும். லிங்கத்திற்கு எதிரான துவாரம் எதுவோ அது கிழக்காகவும் அமைதல் வேண்டும் எனக் கூறுகின்றது.

திருக்கோயிலின் விமானத்தின் இன்னோரம்சம் நாளம் எனும் கோமுகியின் அமைவிடமாகும். இவ்வமைப்புப் பற்றி காமிகாகமம் (I.55) கூறுகின்றது. சிற்பசாஸ்திரங்களில் மயமதம், காசியபசில்பம் ஆகியன கூறுவது குறிப்பிடத்தக்கது.

திருக்கோயிலின் விமானத்தினைச் சுற்றி அதிஷ்டானத்தில் அமைவது கோஷ்டங்களாகும். இக்கோஷ்டங்கள் அர்த்தமண்டபம், கர்பகிருகம் ஆகியவனவற்றில் அமையும். இவ்வகையில் அர்த்த மண்டபத்தின் தெற்காக நிருத்த கணபதியும், வடக்காகத் துர்க்கையும் விளங்குவர். கர்ப்ப கிருகத்தில் தெற்கு, மேற்கு, வடக்குத் திக்குகளில் முறையே தக்ஷிணா மூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா விளங்குவர் என்பதனை ஆகமங்கள் வலியுறுத்துகின்றன. விமானத்தோடிணைந்த இத்தன்மைகளை காமிகாகமம் (I.55) ப்ராஸாத பூஷணவிதி விவரிக்கின்றது. சிற்பசாஸ்திரங்களும் இது பற்றி விளக்குகின்றன.

விமான பேதங்கள்

விமானங்கள் திருக்கோயில் அமைப்பில் முக்கியத்துவம் பெறுகின்றன. விமானத்தின் அமைப்பு கலையம்சத்தில் பாணி எனப்பேசப்படுகின்றது. ரௌரவோத்தராகமம் (1.5-12) நாகரம், கிராவிடம், வேசாரம் எனும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாணிகளில் ஒவ்வொன்றும் 16 வகை பேதங்களைக் கொண்டதாக அமைந்து 96 பேதங்களைப் பெற்று விளங்கு கின்றது என விளக்குகின்றது. (படம் 2)

கர்ப்பகிருகத்தில் மூர்த்திகளின் ஸ்தானம்

திருக்கோயில்களின் மையப்பகுதி கர்ப்பகிருகமாகும். இக்கர்ப்பகிருகத்தின் உட்பகுதியில் இறைவன் ஸ்தாபி க்கப்படுவது மரபு. பிராஸாதத்தின் உள்ளே பிரதிஷ்டை செய்யப்படும் மூலமூர்த்தியுடன் பிராஸாதம் இணை பிரியாத நெருங்கிய தொடர்புடையதாக உடல் பிரா ஸாதமென்றும், உயில்மூலவர் என்றும் பிரிவற்ற தன்மையை சூக்ஷ்மாகமம் கூறுகின்றது. தேகமே தேவாலயம் என்றும், ஜீவனே தேவர் என்றும் ஸ்கந்தேய உபநிஷத்தும் ப்ராஸா தத்தை மனித உருவாகக் கொள்ள வேண்டுமென சில்பரத்தி னமும் கூறுகின்றது. இதே கருத்தை திருமூலரும் திருமந்தி ரத்தில் சுட்டுகிநன்றார். இதனூடாக பிராஸாதத்தை மனித னையொத்த அங்கங்களுடையதாக அங்கஹீனமின்றிக் கற்பிக்க வேண்டும் என்பது மரபாக உள்ளது.

இத்தகைய சிறப்புடைய ப்ராஸாதத்தின் உட் புறமாகிய கர்ப்பகிருகத்தில் மூர்த்திகளை ஸ்தாபனம் செய் யும் விதிமுறைகளை ஆகமங்கள் விரிவாக எடுத்தியம்பு கின்றன. காமிகாகமம் விளக்குகையில் கர்ப்ப கிருகத்தை இருபது பாகமாக வகுத்து மையப்பகுதியிலிருந்து பின்சுவர் வரையாகவுள்ள பத்து பதங்களில் மத்திய பதத்தில் சிவனையும் 2வது பதத்தில் பிரம்மாவையும், 3வது பதத்தில் விஷ்ணுவையும், 4வது பதத்தில் ஷண்முகரையும், 5வது பதத்தில் லக்ஷ்மி, சரஸ்வதி ஆகியோரையும் 6வது பதத்தில் பக்த தேவதைகளையும் 7வது பதத்தில் விநாயகரையும், 8வது பதத்தில் பைரவரையும், 9வது பதத்தில் சக்தி, துர்க்கை ஆகியோரையும் ஸ்தாபிக்கவேண்டும். 10வது பதத்தில் எந்த தேவதைகளையும் ஸ்தாபிக்கக்கூடாது என விளக்குகின்றது. பொதுவாக ஆகமங்கள் சிவனை மத்தியில் ஸ்தாபிக்கும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

படியும், அஜிதம், சுப்ரபேதம் ஆகியன சற்று ஈசானம் நோக்கி யதாகவும் ஸ்தாபிக்கவேண்டும் என விதிக்கிறது. சித்தாந்த சேகரம் விளக்குகையில் சிவனை மத்தியிலும் ஸ்தாபிக்கக் கூடாது பத்தியை விலத்தியும் ஸ்தாபிக்கக்கூடாது. வேதா தோஷத்தை விலக்குவதற்காக சற்று ஈசானத்திற்கு நகர்த்தி (திருப்பி) செய்யவேண்டும் எனக்கூறுகின்றது. (படம் 3)

திருக்கோயில் மண்டபங்கள்

சிவாகமங்கள் ப்ராஸாதத்தை மையமாகக் கொண்டன. பிராஸாதத்தின் வெளிப்புற அளவானது தண்டம் எனக் கூறப்படுகினறது. இதனையே காற்புறவாஸ் அளவு எனக் கொண்டு அவ்வாலயம் முழுவதற்குமான ஏனைய அளவை முறைகளை இதிலிருந்து அளந்து மேற்கொள்ளுவது மரபாக உள்ளது.

சிவாகமங்களில் மண்டப லக்ஷணவிதிகளை காமிகாகமம் (I.70), காரணாகமம் (II.6), கிரணாகமம் (III.25), தீப்தாகமம் (10), வீராகமம் (46), சுப்ரபேதம் (I.31), சூக்ஷ்மாகமம் (35), அம்சுமத் காசியபம் (43), சந்தான சம்ஹிதை (12), அஜிதாகமம் (க்ரியாபாதம். 73) ஆகியன மிகவிரிவாகத் தெளிவுபடுத்துகின்றன. ஆலயத்தின் மையப் பகுதி மூர்த்தி நோக்கும் திசையும் பிராஸாதத்தின் வாயில் கொள்ளும் மையமுமேயாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு மண்டபங்கள் விரித்துச் செல்லும் தன்மையன.

கர்ப்பகிருஹத்தின் முன்பக்கமாக கருவறையின் பாதியளவாகவாவது சரியாகவாவது அமைவது அர்த்த மண்டபமாகும். இதனை முகமண்டபம் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன. அதற்கு வெளியால் அமைவது மஹாமண்டபமாகும். இதனை தேவமண்டபம் என்றும் அழைப்பர். இது 4,2 ஸ்தம்கங்களுடன் கூடியும் அமையலாம். இதற்கு வெளியில் உள்ளது ஸ்நபன மண்டபமாகும். இதற்கு வெளியால் உள்ளது விருஷப மண்டபம். இதற்கு வெளியே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிருத்த மண்டபமும் அதற்கு வெளியில் கோபுரத்வாரமும் அமைவது சாஸ்திர சம்பந்தமாகும். மஹாமண்டபத்திற்கு வெளியில் உள்ள மண்டபங்கள் 16, 32, 64, 96, 100 ஸ்தம்பங்களுடன் கூடியதாகவும் பேசப்படுகின்றன. இவற்றின் விரிவுகளை ஆகமங்கள் விபரிக்கின்றன. அந்த மண்டபங்கள் நிந்தியாவர்த்தம் 4 கால்களையுடையது, 16 கால்களையுடைது ஸ்ரீபிரிதிஷ்டிதம், 20 கால்களையுடையது வீராஸனம், 32 கால்களையுடையது ஜயபத்ரம், 36 கால்களையுடையது ஸ்ரீயா வர்த்தம், 64 கால்களையுடையது மாணிபத்ரகம், 100 கால்களையுடையது விலாசம் எனப் பெயர்கள் சுட்டப்படுகின்றன. மேலும் எல்லா மண்டபங்களும் ப்ராஸத உயரத்திற்குக் குறைவாக இருக்கக் கூடாது என்பதனை விளக்குகின்றன.

திருக்கோயிலில் த்வஜஸ்தம்பம்

திருக்கோயில் த்வஜஸ்தம்பம் என்பதுவும் ஒரு கட்டடம் போன்ற நிலையான தன்மையைப் பெற்று விளங்குகின்றது. இது தண்ட அளவில் பசுவாக விளங்கும் (சிவாலயங்களில்) விருஷபத்திற்குப் பின்புறமாக அமைந்திருக்கும். இந்த த்வஜ ஸ்தம்பமானது எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை சிலாகமங்களில் மஹோற்சவ விதிகள் கூறுகின்றன. மஹோற்சவ விதிகளை காமிகாகமம் (II.6), காரணாகமம் (I.141, I.24), அஜிதம் (க்ரி யாபாதம்.27), ரௌரவ (I.2,18), சந்திரஞானாகமம் (21), தீபதம் (83, 97), மகுடம் (5), யோகஜம், சுப்ரபேதம் (14), வீரம் (51), ஸஹஸ்ரம் (6), சூக்ஷ்மம் (13), ஸ்வாயம்புவம் (37) என்பனவும் அகோரசி வாச்சார்யார்பத்ததி மஹோற்சவ விதியும் விளக்குகின்றது. இதில் முக்கிய பகுதிய த்வஜஸ் தம்பமாகும்.

விரிவுபடும் நிலைகளில் த்வஜஸ்தம்பம் அமைய வேண்டிய ஸ்தானத்தை காமிகாகம் (6.61, 62) கூறுகையில் தேவாலயத்தினது முகம் போன்றது த்வஜதண்டம். இதனை விருஷபத்திற்கு முன்புறமோ, பின்புறமோ, அவ்விதமே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கோபுரத்திற்கு முன்னாகவோ, பின்னாகவோ, மஹா பீடத்திற்கு அண்மையிலோ, அர்தர் மண்டல சாலைகளில் நடுவிலோ, அல்லது கோபுரங்களுக்கு நடுவிலோ அமைய வேண்டும், என விதிக்கின்றது. மேலும், காமி காகமம், (6.62, 63) கூறுகையில், ஒன்பது ஐந்து, ஒன்று எனும் எண் கணக்கில் த்வஜங்களை ஸ்தாபிக்கலாம். ஒன்பது எனில் நடுவில் ஒன்று பிரதானமானது என்றும் எட்டுத் திக்குகளிலும் எட்டும் என்றும், அல்லது நான்குதிக்குகளிலும் நான்கு என்றும் கூறப்படுகின்றது.

இத்தகையதான எண்ணிக்கையுடைய த்வஜஸ்தம்பத்தின் உயரமானது விமானத்தின் உயரத்திற்கு சமமாகவோ, சிகரத்திற்கு அதிகமாகவோ, நாஸிகத்திற்கு அதிகமாகவோ, கோபுரத்திற்கு அதிகமாகவோ, ப்ரஸ்தரம் வரையாகவோ, களம் வரையாகவோ அமையலாம் என அஜிதாகமம் (க்ரியாபாதம் 27, 76) கூறுகின்றது.

திருக்கோயிலில் பிராகாரங்கள்

திருக்கோயிலை மையமாகக் கொண்டு சுற்றியிருக்கின்ற பகுதிகளை ஆகமங்கள் அளவுகள் மூலம் வகைப் படுத்தித் தெளிவு படுத்துகின்றன. தண்ட அளவின் அடிப் படையில் அமையும் ப்ராகாரங்கள் பற்றிய விபரங்களை சிவாகமங்கள் கூறுகின்றன. ப்ராகாரலக்ஷணவிதிகளை அம்சுமத் காசியபம் (42), அஜிதாகமம் (38), காமிகாகமம் (I.71), க்ாரணாகமம் (I.8), தீப்தாகமம் (12), சந்தான சம்ஹிதை, (11), சுப்ரபேதம் (I.31), ரௌரவம் (41) என்பன விளக்குகின்றன.

சிற்ப சாஸ்திரங்களுள் மயபதம் (பூர்வம் 23,1) கூறுகையில், விமானங்களின் ரக்ஷைக்காகவும், அழகுக்காகவும், பரிவாரங்களை வைப்பதற்காகவும், புத்திமான்கள் பிராகாரத்தைக் கூறியிருக்கிறார்கள் எனச் சிறப்பாகக் கூறுகின்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இங்கு தண்டஅளவுபற்றி அஜிதாகமம் (க்ரியபாதம் 38, 1-3) ப்ராஸாதத்தின் விஸ்தாரத்திலிருந்து பெறப்படும் அளவானது தண்டம் என்று கற்பிக்கப்படுகின்றது. இந்தத் தண்டம் எனும் அளவானது மூன்று விதமாக அளவு முறைகளில் வேறுபடுகின்றது. உபகரணத்திலிருந்து அளத்தல் உத்தம் என்றும், கைரவத்திலிருந்து அளத்தல் மத்யமம் என்றும், பாதாந்தத்திலிருந்து அளத்தல் அதமம், என்றும் கூறுகின்றது.

இவ்வளவிலிருந்து பெறப்படும் பல்வேறு பட்ட அளவை முறைகள் பிராகாரங்களை அமைப்பதற்குப் பயன் படுத்தப்படுகின்றன. இந்நிலையில் பிராகாரங்கள் ஐந்து, அவை கர்ப்பகிருகத்திலிருந்து வெளியாக முறையே அந்தர்மண்டலம், அந்தர்ஹாரம், மத்யஹாரம், மர்யாதா, மஹாமர்யாதா எனும் ஐந்துமாம், இப்பிராகாரங்களின் அளவுகளைத் தண்டமானம் மூலமாகவும், ஹஸ்தமானம் மூலமாகவும் ஆகமங்கள் தெளிவுபடுத்துகின்றன. காரணா கமம் (I.8.17-21) கூறுகையில், ஐந்து பிராகாரங்களோடு கூடியதாகவோ மூன்று பிராகாரங்களுடன் கூடியதாகவோ, ஒரு பிராகாரத்துடன் கூடியதாகவோ (ஆலயத்தை) அமை ப்பதில் திறமை வாய்ந்தவன் அமைக்க வேண்டும். மர்யை முதல் சுவர் வரையாக நீக்கி அவ்விதமே அந்தர் மண்ட லத்தையும் நீக்கி ஏனைய பிராகாரங்களுடன் கூடியது மூன்று பிராகாரம் என்று நினைவிற்கொள்ளவேண்டும். பின்னர் இவ்விதமாக மூன்று பிராகாரம் கூறப்பட்டது. அந்தர் மண்டலகம், மர்யாதி, மத்யஹாரகம் இவைகளைவிட எஞ்சி யவைகள் மூன்று பிராகாரங்கள் என்று நினைவிற்கொள்ள வேண்டும். அந்தர்ஹாரம் எனும் ஒரு பிராகாரத்துடனும் ஆலயத்தை அமைக்கலாம் என விபரிக்கின்றது. இவ்வாறாக பிராகாரங்கள் பரந்து செல்லும் தன்மையினை ஆகமங்கள் விபரிக்கின்றன.

ஒவ்வொரு பிராகாரத்திலும் இருக்கவேண்டியவை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எவையெவை என்பதை அஜிதாகமம் (க்ரியபாதம் 38.43-53) பிவரிக்கையில், அக்னிதிக்கில் பாசகஸ்தானம் நான்கு சாலைகளுடன் கூடியதாகவும், கிழக்கு அக்கினிதிக்கின் நடுவில் வியஞ்ஜனாலயமும் கூறப்படுகின்றது. தெற்கு அக்னி திக்கின் நடுவில் ஸ்நானத்திற்குரிய நீர்நிலை கூறப்படு கின்றது. தெற்கு நிருதி ஆகியனவற்றிற்கு நடுவில் புஷ்ப சாலை புகழப்படுகின்றது. நிருதி வருணதிக்கின் நடுவில் புஷ்பசாலை ஆகின்றது. நிருதியில் தனதான்யம் இவைகளின் ஸ்தானத்தையும் நன்கு கற்பிக்கவேண்டும். நிருதி, வருணம் ஆகிய திக்குகளின் நடுவில் தர்மசிரவண நன்கு புலப்பட கின்றது. வாயு வருண திக்கின் நடுவில் வித்யாஸ்தானம் நன்கு புலப்படுகின்றது. வாயுதிக்கில் ஆயுதசாலையானது வஸ்திரசா லையுடன் கூடியதாகவும், வாயு வடக்கு ஆகியனவற்றின் நடுவில் சயனஸ்தானம் சுட்டப்படுகின்றது. வடக்கு ஈசானம் ஆகியனவற்றின் நடுவில் சத்ரம் இவைகளையுடைய இருப் பிடமும், ஈசான திசையில் யாக மண்டபமானது உத்தம மா கும். ஈசானத்திற்கும் கிழக்கிற்கும் நடுவில் கூபஸ்தாபகுனம் கூறப்படுகின்றது. இதே ஈசான சக்கரதிக்குகளின் நடுவில் தான்யஸ்தானம் விதிக்கப்படுகின்றது. ஏனைய எல்லா ஸ்தா னங்களும் கூறப்படுகின்றது.

இவ்வாறான விபரங்களை அம்சுமத் காசியபம் (42, 63, 76) தெளிவுபடுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

(படம் 4)

திருக்கோயிலில் பரிவாராலயங்கள்

திருக்கோயில்களில் மூலாலயத்தில் இருக்கும் இறை வன் மூலவர் என்றும், அத்தெய்வத்திற்குப் பரிவாரங்களாக இருப்பவர்களைப் பரிவாரதெய்வங்கள் என்றும் அவற்றிற் குரிய கோவில்களை பரிவாராலயங்கள் என்றும் அழைக்கும் மரபு காணப்படுகின்றது. சிவாகமங்கள் இறைவனுக்குரிய பரிவாரங்கள் (சிவனுடைய) பற்றிக் கூறுகையில் பரிவா ராலயவிதி என காமிகாகமம் (I.71) காரணாகமம் (I.60, 66, II.88), சுப்ரபேதாகமம் (I.39), அம்சுமத்காசியபம் (45, 50)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காலோத்தரம் (52), தீப்தம் (11), யோகஜம் (17), வீரம் (41), சந்தானம் (14) ஆகியன தெளிவுபடுத்துகின்றன.

திருக்கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்தியின் இயல்புகள் இரண்டு வகைப்படும். அதனை வகைப்படுத்துகையில் காரணாகமம் (I.57.11-12), ஸ்வதப் பிரதானம் ஸாங்கம் என ஸ்தாபனம் இரண்டு விதமானவை என்பதனை நினைவிற்கொள்ளவேண்டும். பரிவாரங்களு டன் கூடியது ஸ்வ ஸ்வப்ரதானகம் ஆகிறது. ஸாங்கம் என்பது பரிவாரமின்றி ஸ்தாபித்தலாகும் எனக் கூறுகின்றது. இந் நிலையில் பரிவாரங்கள் எட்டு, பதினாறு, முப்பத்தி ரெண்டு என விரிந்து செல்கின்றது. திருக்கோயில்களில் அந்தர் மண்டலத்தில் அஷ்டபரிவாரங்களை அமைக்க வேண்டும் என்றும், பதினாறு பரிவாரங்களெனில் அந்தர்ஹாரத்திலும், முப்பத்திரெண்டு பரிவாரங்ளெனில் மத்யஹாரத்திலும் அமைக்கவேண்டும். இவ்வாறான இடங்களில் சுவற்றை அண்மித்ததாகவோ அன்றில் மத்தியிலோ அமைக்க வேண்டும் என அஜிதாகமம் (2.39.2,3) கூறுகின்றது.

மேலும் பரிவாராலயங்கள் நோக்கவேண்டிய திசை ஆலய அமைப்புமுறைமைகள் பற்றியெல்லாம் சிவாக மங்கள் விரிவுபடுத்துகின்றன.

(படம் 5)

பரிவாராலயங்களுள் சண்டேஸ்வரர், க்ஷேத்ரபாலர் ஆகியோர் பரிவாரமாகச் சுட்டப்படவில்லை எனினும் அந்தர் மண்டலத்தில் ஈசான தேசத்தில் சண்டே ஸ்வரராலயம் அமைய வேண்டும் என காரணாகமம், ரௌரவாகமம், அஜிதாகமம், வீரம் ஆகிய ஆகமங்களிலும், ஈசான திக்கில் அஷ்டபரிவாரங்களுள் சண்டேஸ்வரரை இணைந்து யோக ஜாகமமும் கூறுகின்றது.

(அட்டவணை 1)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அண்மைக்காலங்களில் திருக்கோயில்களில் சிவனது பரிவாரங்களுள் ஒருவரான சூரியனது பரிவாரங்களான நவக்கிரஹங்களும், சூக்ஷ்ம நிலையினின்று ஸ்தூலநிலையில் பிரதிஷ்டை செய்யும் மரபு காணப்படுகின்றது. சூரியனது பரிவாரங்களின் ஸ்தானங்கள் பலவாறு பேசப்படுகின்றமை மனங்கொள்ளத்தக்கது.

(அட்டவணை 2)

மேலும், சிறப்புப்படுத்தும் நிலையில் மேற்குநோக்கிய ஆலயங்களுக்குரிய சிறப்பினை யோகஜம் (17.19) அஜிதம் (2.49, 22) ஆகியன கூறுகின்றன. இவற்றோடு மஹாபீடம் பற்றியும் விரிவாகக் கூறுகின்றன.

பரிவார தேவதைகளைவிட ஏனைய பிரதிமைகளை சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரமூர்த்திகளாகப் பாகுபாடு செய்து அவை நோக்கும் திசைகளை காரணாகமம் (I.73) கூறுகின்றது. இதைவிட பிரதிமைகளைப் பாகுபாடு செய்து அதனை ஸ்தாபிப்பதற்காகப் பிராஸாதத்திற்கு அண்மையிலோ அன்றில் வலது புறமோ அன்றில் வேறு இடத்திலோ ஈசான திக்கிலோ மண்டபம் அமைத்து அங்கு ஸ்தாபிக்க வேண்டும் எனக் கூறுகின்றனது.

இவற்றைவிட துவாரபாலகர்களின் ஸ்தாபன விதிகளை காரணம் (II.86), தீப்தம் (67), வீரம் (41), ஸஹஸ்ரம் (44), சுப்ர பேதம் (I.39) அம்சுத்பேதாகமம் (23), ரௌரவம் (2.32) ஆகிய ஆகமங்கள் கூறுகின்றன.

திருக்கோயில்களில் சக்தி

திருக்கோயில்களில் சிறப்பாக சிவாலயங்களில் சக்திகளின் ஸ்தாபன விதிகளை காரணம் (I.89, II.84), காமிகம் (II.44), சுப்ரபேதம் (38), யோகஜம் (13), சந்தானம் (35), ஸஹஸ்ரம் (41), அசிந்தியவிஸ்வசாதாக்கியம் (59), அம்சுமதாகமம் (80), ரௌரவம் (2.31) ஆகிய ஆகமங்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விரித்துரைக்கின்றன. இந்நிலையில் சிவனுக்கு பரிவாரமாக இல்லாது சக்தி விளங்குவது குறிப்பிடத்தக்கது.

சக்தியினை ஸ்வதந்திரம், கேவலம் என இரண்டு, விதமாக ஆகமங்கள் வகைப்படுத்துகின்றன. அவற்றுள் ஸ்வதந்திரம் - வீரம் என அழைக்கப்படுகின்ற சக்தியானவள் அதற்குரிய பரிவாரங்களுடன் கூடியவள். எந்த சக்தி பரிவாரம் இல்லாது விளங்குவாளோ அந்த சக்தி கேவலம் என்று நன்கு புகழப்படுகின்றது என அம்சுமத்பேதாகமம் கூறுகின்றது.

காரணாகமம் சக்தி பற்றி விளக்குகையில் எல்லா உலக நன்மையின் பொருட்டும் எல்லா அறிவையும் அளித்தற் பொருட்டும் சக்தியானவள் மூன்று விதமாகக் கூறப்படுகின்றாள். அவையாவன. யோகம், போகம், வீரம் என்பனவாகும். யோகசக்தி என்பது சிவலிங்கத்தினுடைய பீடத்தோடு கூடியதாகவும் போகசக்தி என்பது சிவனுக்கு இடதுபுறம் வீற்றிருப்பது என்றும் வீரசக்தி ஸ்வதந்திரம் என்றும் மூன்று விதமாக சக்திகள் கூறப்படுகின்றன. போகசக்தியானவள் மூலலிங்கத்திற்கு சமீபத்தில் இடது புறம் அர்த்தமண்டபத்தில் இருப்பவளாகவோ நிற்பவளாகவோ கூறப்படுகின்றாள் எனத் தெளிவுபடுத்துகின்றது. இத்தகைய நிலையினின்று சக்தியினுடைய ஆலயங்கள் சிவாலயங்களுள் தனித்துவத்தோடு விளங்குவது குறிப்பிடத்தக்கது. இத்தன்மை சிவனுக்கு மாத்திரம் உரியதென்பதும் குறிப்பிடத்தக்கது.

காரணாகமம் (II.6.8-17) கர்ப்பகிருகம் பிராகாரங்களால் சூழப்பட்டு எங்கெங்கு எவ்வெத்தெய்வங்கள் விளங்கவேண்டும் என விளக்குகையில், கோபுரத்தின் தெற்கே சூரியனும் அதற்குத் தெற்கே பாகசாலையும் அதற்கு மேற்கே உமையும் இறைவ னுக்கு மேற்கே நிருதியில் சிறிதுதெற்கை ஒட்டி சோமாஸ்கந்தரும் அதற்குத் தெற்கே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விநாயகரும் கூறப்பட்டது. விநாயகருக்கு விமான அமைவு உத்தமமாகும். மேற்கு வாயுதிக்கு இரண்டிற்கும் நடுவில் குகனும் வாயுவில் மகாலக்ஷ்மியும் அதற்குக் கிழக்கே சண்டிகாவும் அதற்குக் கிழக்கே மஹிஷியும் அதற்குக் கிழக்கே வெளியில் ஈசானத்திற்கும் வடகிழக்கிற்கும் நடுவில் நடேஸ்வரரும், அதற்கு மேற்கே சோமதாரியும் விசேஷ மானது. அதற்கு மேற்கே கௌரியும் அதற்கு வடக்கே சண்டேஸ்வரரும் நடேசரும் ஈசானத்தில் சயனாலயம் (பள்ளியறை) அமைவது உத்தமமாகும். கோபுரத்திற்கு வடக்கே க்ஷேத்திரபாலரும் அதற்கு வடக்கே யாகசாலையும் கூறப்படுகின்றது. இறைவனுக்கு முன்பக்கத்தில் இடப தேவரும் அதற்குமுன் பலிபீடமும் விசேக்ஷமானதாகும் எனத் தெளிவுபடுத்துகின்றது. (படம் 6)

திருக்கோயிலின் பிராகாரங்களில் எவ்வெவ்மண்ட பங்கள் எவ்வெவ் ஸ்தானங்களில் அமையவேண்டும் என்பதனைக் காரணாகமம் பிராகார லக்ஷணவிதிபடலம் (I.8) கூறுகையில், அந்தர் மண்டபத்தை அடுத்து முதற் பிராகாரமும் இரண்டாவதாக அந்தர்த்வாரத்தை அடுத்து இரண்டாம் பிராகாரமும் மத்தியஹாரம் மூன்றாவது பிராகாரமாகவும் மர்யம் நான்காவது பிராகாரமாகவும் மஹாமர்யா ஐந்தாவது பிராகாரமாகவும் அமையும். (இவற்றின் அளவுகளை சிவாகமங்களும் சிற்பசாஸ்திரங்களும் தனித்தனியாகக் கூறுகின்றன.) பிராகாரங்களைச் சுற்றிச் சுவர்கள் அமையும். இச்சுவர்கள் பித்தி என்றும் மதில் என்றும் பெயர்பெறும். ஐந்து பிராகாரங்களையாவது மூன்று பிராகாரங்களையாவது அல்லது ஒரு பிராகாரத்தையாவது கொண்டதாகக் கோயில் அமையலாம். மதிலின்மேல் சத்திராக ராமான மேற்பகுதியைச் செய்யவேண்டும் அல்லது கட்டப்பட்ட ஹர்மியத்தில் சாலையுடன் கூடியதாக அமைக்க வேண்டும். இரண்டாவது பிராகாரத்தில் மௌலிகா க்ருதியோ அல்லது சபாக்ருதியோ அமைக்கத்தக்கது. அப்பிராகாரத்தில் இரண்டு அல்லது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மூன்று தளத்துடன் கூடியதாக ஒவ்வொரு பிராகாரத்திலும் சிறப்பாகக் கோபுரத்தை அமைக்கவேண்டும். அக்கினி திக்கில் அமைவது பவனாலயம் ஆகும். இரண்டாம் பிரா காரத்தில் வடகிழக்கு மூலையில் கிணறு இடம்பெறும். கிழக்கிற்கும் வடகிழக்கிற்கும் நடுவே அமையவேண்டியது வாத்திய சாலையாகும். கிழக்கிற்கும் தென்கிழக்கிற்கும் நடு வில் புஷ்பமண்டபம் அமையும். தென்கிழக்கிற்கும் தென் மேற்கிற்கும் இடையில் நீராடுவதற்கென அமைக்கப்பட்ட திருக்குளம் இருத்தல் வேண்டும். தென்மேற்கிற்கும் மேற்கிற் குமிடையே விளங்குவது தர்மசிரவண மண்டபமாகும். மேற்கிற்கும் வட மேற்கிற்கும் நடுவில் ஆயுத மண்டபம் இருக்கும். வடமேற்கிற்கும் வடக்கிற்கும் நடுவில் பள்ளி யறை அமையும். வடக்கிற்கும் வடகிழக்கிற்கும் நடுவே யாக மண்டபம் அமையும். கோயிலின் முன்புறமாக அமைவது ஆஸ்தான மண்டபம் எனத் தெளிவுபடுத்தி ஆலயத்தைச் சூழ அமையும் குடிகள் அவர்களில் இருப்பிடங்கள் ஆகியனவற் றையும் தெளிவுபடுத்துகின்றது.

திருக்கோயிலில் கோபுரம்

திருக்கோயில் அமைப்புமுறைகளில் கோபுரமானது இறைவனை எம்மையாளும் அரசனாகக் கொள்ளும் காட்சியினைத் தெரிவிக்கும் தன்மையுடையதாகப் புலப்படுத்துகின்றது. கோபுரம் என்பது கோவிலின் முன்புறமாக பிராகாரங்களுக்கு நடுவிலும் பிராகாரங்களில் நான்கு திக்குகளிலும் அமையத்தக்க சிறப்புடையன என சிற்பநூல்கள் கூறுகின்றன. இவற்றை பஞ்ச கோபுரங்கள் எனக்கூறி நடுவே உள்ளது மத்தியகோபுரம் என்றும் கிழக்கு முதலான திக்குகளில் அமைவது முறையே பூர்வ, தக்ஷிண, பச்சிம, உத்திர கோபுரங்கள் என விளக்குகின்றன. கலை யம்சங்கள் நிறைந்த திருக்கோயிற் கட்டட அமைப்பில் கோபுரங்களுக்குரிய லக்ஷண விதிகளை ரௌரவாகமம் (2.42), அம்சுமத், காசி யபம் (44), அம்சுமதாகமம் (45), காமிகாகமம் (75), காரணாகமம் (8, 5.94), தீப்தம் (12), சுப்ர

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பேதம் (31), சூக்ஷமம் (34) ஆகிய சிவாகமங்களும் காசியபசில்பம் (45), மயமதம் (24) முதலான சிற்ப சாஸ்திரங் களும் மிக விரிவுபடுத்திக் கூறுகின்றன.

பிராஸாதம் என்கின்ற விமானத்தின் நுணுக்கமான அளவிலிருந்து விரிந்து செல்கின்ற திருக்கோயிலின் அமைவில் ஐந்து பிராகாரங்களிலும் முதலாம் பிராகார மாகிய அந்தர் மண்டபத்தில் துவாரசோபை, இரண்டாம் பிராகாரம் என்னும் அந்தர் த்வாரத்தில் துவாரசாலை, மூன்றாம் பிராகாரமாகிய மத்யஹாரத்தில் துவார பிராஸாதம், நான்காம் பிராகாரமாகிய ஹர்மியத்தில் துவார ஹர்மியம் அல்லது மஹாமர்யாதை, ஐந்தாம் பிராகார மாகிய மஹாமர்யையில் ராஜகோபுரம் அல்லது மகாகோபுரம் என்னும் பெயர்களை உடையதாக கோபுர ங்கள் அவ்வவற்றிற்குரிய லக்ஷணங்களுடன் அமைந்து காணப்படும் சிறப்புடையன என மானசாரம் கூறுகின்றது.

பத்துவகை கோபுரங்களுள் ஸ்ரீபோகம், ஸ்ரீவிசாலம், விஷ்ணுகாந்தம், இந்திரகாந்தம், பிரம்மகாந்தம், ஸ்கந்த காந்தம், சிகரம், சௌமியகாந்தம் என்னும் எட்டு குறிப்பிடத் தக்கன. சிகரம், ஸ்தூபி, க்ரணகூடம், க்ஷுத்ராஸி ஆகிய உறுப்புக்கள் கோபுரத்தில் முக்கியத்துவம் உடையன. மானசாரம் ஒன்று முதல் பதினேழுதளங்கள் வரையாக அமையும் கோபுரத்திற்குரிய முறைமையைக் கூறுவதோடு ஐந்து தளங்கள் உருவாகும் முறைகளை எடுத்துக்கூறு கின்றது. அங்கு ஒவ்வொரு தளங்களிலும் காணப்படும் அறைகள், தூண்கள், சுவர்கள், முடிகளுடன் கூடிய விமான ங்கள், நிலைகள், யன்னல்கள், விரிவர்க்கங்கள் முதலான வைகளை விரித்துக் கூறுகின்றது. பிராசாதத்தைப் போன்று கோபுரங்களும் நாகபந்தம், வல்லீ, கவாக்ஷம், குஜராக்ஷம், ஸ்வஸ்திகம், சர்வதோபேதம், நந்தியாவர்த்தம், புஷ்பதந்தம் முதலான அமைப்பு விதிகளினூடு பெறப்படுகின்ற தனித்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

துவமான பெயர்களைக் கொண்டு விளக்குவதனைக் காண முடிகின்றது. (படம் 7)

திருக்கோயிலில் மையப்பகுதியாகப் பிராஸாதத்தை மனித உறுப்பியல்புகளுடன் விஸ்வகர்மீயவாஸ்து சாஸ்திரம் விமான அங்கங்களின் தொடர்புகளை எடுத்துக் கூறுகின்றது. அதேபோன்று மனிதனின் கிடைத்தோற்றத்தில் திருக்கோயிலின் அமைவானது தலைமுதல் பாதம் வரையாக விபரிக்கப்படுவது மனங்கொள்ளத்தக்கது. மேலும் கிரியைகளில் விமானமற்ற திருக்கோயிலில் செய்யப்படும் எந்த விதமான பூஜைகளும் பலனற்றது எனும் விதியானது திருக்கோயில் அமைவிட முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றது. (படம் 8)

இவ்வாறாக மிகமிக விரிவான உள்ளீடுகளையும் கலை நுணுக்கங்களையும் மரபுகளையும் தெய்விகத் தன்மைகளையும் தன்னுட்தாங்கிய தன்மையுடையதாக திருக்கோவிற் கட்டடக் கலை மரபுகளைச் சிறப்பாக விதி நூல்களாகி சிவாகமங்களும் சாஸ்திரங்களும் விளக்கி நிற்கின்றன. இம்மரபானது சிவாலய அமைவுகளுக்குரிய விடயங்களைத் தெளிவுபடுத்துவதோடு ஆங்காங்கே ஏனைய ஆலயங்களின் தன்மைகளையும் சுட்டிக்காட்டுகின்றது. சிவாகமசம் மதமான இம்மரபின் அடிப்படையில் இருந்தே ஏனைய தெய்வங்கள் தனித்துவமான திருக்கோயில் அமைப்பைப் பெற்று விளங்குவதனைக் காணமுடிகின்றது.

உசாத்துணை நூல்கள்

மூலநூல்கள்

1. அஜிதாகமம் : Vol. I, II, III, Ed. N.R.Bhat, Institute Francias D'Indologic, Pondicherry - 1964, 1967, 1991.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

2. காமிகாகமம் : (பூர்வபாகம்) ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியர் (பதி), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை , 1978

3. .... : (உத்தர பாகம்) ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியர் (பதி) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை, 1988

4. .... : (க்ரியா பாதம், பூர்வ பாகம்) முதற்பகுதி, தமிழ் சந்திரிகையுடன் சிசுவாமிநாத சிவாச்ச ாரியார் (பதி), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை, 1975.

5. காரணாகமம் : (பூர்வ பாகம்) 1ம் பாகம், மயிலை, அழகப்ப முதலியார் (பதி.), சிவஞானபோத யந்திரசாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை. கலி.5023 (1921)

6. .... : (உத்தரபாகம்) 2ம் பாகம், மயிலை, அழகப்ப முதலியார் (பதி.)சிவஞானபோத யந்திர சாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை, கலி 5029 (1927).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

7. ரௌரவாகமம் : Vol. I, II, III, Ed. N.R.Bhat, Institute Francias D'Indologic, Pondicherry - 1961, 1972, 1988.

8. சுப்ரபேதாகமம் : மயிலை. அழகப்ப முதலியார் (பதி). சிவஞான போத யந்திர சாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை, கலி 5099 (1907).

9. மகுடாகமம் : (பூர்வபாகம்) சி.சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி.), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை, 1997.

10. வேதஞானரின் சிவாகம பரிபாஷா மஞ்ஜரீ : Ed.Bruno Dagens, Institute Francias D'Indologic, Pondicherry - 1979.

11. ஸ்ரீமத் கிரணாகமம் மஹாதந்திரம் : சிவாகம சித்தாந்த பரியாலன சங்கம், தேவகோட்டை, 1932.

12. உபயவேதாந்தி விஸ்வநாதரின் சித்தாந்த சேகரம் : ஸ்ரீ. K.சீதாராம கிருஷ்ண சோமயாஜி (பதி). ஸ்ரீ. ஜோன்மணீ க்ரந்தமாலை, மைசூர், 1971.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

13. ஸ்ரீமத் காச்யப சில்ப சாஸ்திரம் : (பூர்வ பாகம்) கே.எஸ்.சுப்ரமண்ய சாஸ்திரிகளின் தமிழ் மொழிபெயர்ப்புடன், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1968

14. மயமுனிவரின் மயமதம் : (பூர்வ பாகம்) கே.எஸ்.சுப்ரமணிய சாஸ்திரிகளின் தமிழ்மொழி பெயர்ப்புடன், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1966.

15. .... : (உத்தரபாகம்) கே.எஸ்.சுப்ரமணிய சாஸ்திரிகளின் தமிழ்மொழி பெயர்ப்புடன், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1966.

16. அகஸ்தியரின் சகளாதிகாரம் : ஸ்ரீ.கே.வாசுதேவ சாஸ்திரிகளின் தமிழ்மொழி பெயர்ப்புடன், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1966.

ஏனைய நூல்கள்

1. DEVALAYA VASTU : (Vol.I.) S.K.Ramachandra Rao, KALPATHARU RESEARCH ACADEMY, BANGALORE, 1997.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

2. **SIVA TEMPLE AND TEMPLE RITUALS**
: **Ed. S.S. JANAKI, The Kuppuswami Sastri Research Institute, Madras, 1988.**

3. கைலாசநாதக் குருக்கள். கா
: சைவத்திருக்கோயிற் கிரியைநெறி, இந்து கலாபிவிருத்திச் சங்கம், கொழும்பு, *1961*.

4. **INDIAN TEMPLE TRADITIONS**
: **S.K.Ramachandra Rao Kalpatharu Research Academy, Bangalore, 1997.**

விக்கினேசுவரர்

எத்தனையோ அனுபூதிமான்கள் தம்முடைய அனுபவங் களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பலர் கவிதைகளாகப் பண்ணியிருக்கிறார்கள். கீர்த்தனங்களாக அனேகம் பேர் எழுதியிருக்கிறார்கள். தீக்ஷிதர் கிருதிகள், சாமா சாஸ்திரிகள் திருதிகள், தியாகையர் அவர்களுடைய கிருதிகள் நிறைய இருக்கின்றன. தயாகையர் அவர்க ளுடைய பாட்டுகளில் ஒரு பாட்டாவது தெரியாதவர்கள் இல்லை. இப்போது இவர்களைப் பாடச் சொன்னேனே, கிரிராஜசுதா நதய என்ற பாட்டும் தியாகையரவர்களுடை யது தான்.

கிரி என்றால் மலை. ஹிமவத் பர்வதத்திற்குக் கிரிராஜன் என்று பெயர். மலைக்கெல்லாம் ராஜா கிரி ராஜா. சுதா என்றால் பெண். கிரிராஜனுடைய சுதா, ஹிமவானுடைய புத்திரி பார்வதி, கிரிராஜ சுதா, தனயன்தான் பிள்ளையார். அந்தப் பிள்ளையாரை அவர் பாடுகிறார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விநாயகருடைய தத்துவத்தைக் கொஞ்சம் ஆலோசனை பண்ணிப்பார்க்கலாம். நம் பெரியவர்கள் இப்படியொரு சுவாமியை எதற்காக வைத்திருக்கிறார்கள்? இந்த மூர்த்தியிலுள்ள ஒவ்வொரு சின்னச் சமாசாரத்தைக் கவனித்தாலும் அதில் நிறைய தத்துவங்கள் இருக்கின்றன. நமக்குத் தோன்றியவை அவ்வளவு தான் ஆச்சு. அதிலே வேறு தத்துவம் இல்லை என்று சொல்ல முடியாதபடி அவை மேலும் மேலும் வளர்ந்து போய்க் கொண்டே இருக்கின்றன. நம்முடைய அறிவுக்கு தோன்றியது அவ்வளவு தான். அதுசரியோ தப்போ? இன்னும் எத்தனை இருக்கின்றனவோ? நமக்கே ஒன்றும் புரியாதபடி அனேக தத்துவங்கள் விரிந்து கொண்டே போகின்றன.

பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பது எதற்காக? அவர் ஸாக்ஷாத் பரமேசுவருடைய பிள்ளை. விக்கினேசுவரர், தம் அப்பாவைப் பார்த்தே உன் சிரசையே எனக்குப் பலிகொடு என்று கேட்டுவிட்டாராம். ஈசுவரனுடைய சிரசைப் பலிகொடுத்தால் தான் எந்தக் காரிமும் விக்கினமில்லாமல் ஐயம் ஆகும். ஈஸ்வரன் மூன்று கண்ணுடையவன். அதற்காகத்தான் மூன்று கண்ணுடைய அவன் தலைக்குப் பதிலாக மூன்று கண்ணுடைய தேங்காயை உடைக்கிறோம்.

தேங்காய் உடைப்பது உயர்ந்த ஒரு தத்துவத்துவத்திற்கு அறிகுறி. ஈஸ்வரன் தலையை வாங்கும்படியான சக்தி விநாயகருக்கு இருக்கிறது. எல்லாவற்றையும் காட்டிலும் உயர்ந்தது எதுவோ அதைத் தியாகம் பண்ணினால்தான் மகாகணபதிக்குப் பிரீதி ஏற்படுகிறது. அவ்வளவு பெரிய தியாகம் பண்ணுவதற்குத் தயார் என்ற அறிகுறியாகத்தான், ஈஸ்வர சிருஷ்டியிலே, த்ரிநேத்திரத்தையுடைய காயைச் சிருஷ்டித்து அந்தக்காயை அவருக்கு நாம் அர்ப்பணம் பண்ணும்படியாக ஈஸ்வரன் அநுக்கிரகித்திருக்கிறான். அந்தக் காயை அப்படியே சிதர்த்தேங்காயாக உடைக்க வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சந்நியாசிகள் சித்தியானால் கூட, தேங்காய் உடைக்கவேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். சிதர்த் தேங்காய் குறைந்தது மூன்று துண்டுகளாகவாவது போக வேண்டும்.

இந்தப் பழக்கம் தமிழ்த் தேசத்தைத் தவிர வேறு தேசத்தில் தெரியாது. சுவாமி குழந்தையானபடியால் இதில் குழந்தைகளுக்குத் தான் பாத்தியம் அதிகம். மற்றவர் களுக்குப் பாத்தியதை இல்லை. இது எனக்கு ஓர் ஊரில் தெரிந்தது.

சாதுர்மாஸ்யம் என்பதை நான்கு பட்சமாக வைத்து இரண்டு மாசகாலம் வருஷத்தில் ஓர் ஊரில் சந்நியாசிகள் தங்க வேண்டும் என்பது ஒருவிதி. இந்த ஏற்பாடு, ஆயிரம் வருஷத்திற்கு மேலாகவே இருந்து வருகின்றது. ஒரு வருஷம் சாதுர்மாஸ்யத்தில் நான் நாகபட்டினத்தில் இருந்தேன். நித்தியம் கோயிலுக்குப் போய்த் தரிசனம் பண்ணிவிட்டு வருவதுண்டு. சாயந்திர வேளையில் ஒரே கூட்டமாக இரு க்கும். கோயிலுக்குப் போகுமிடத்தில் ஒரு பிள்ளையார், அங்கே நிறைய சிதர்த்தேங்காய் போடுவது வழக்கம். நூற்றுக்கணக்கான குழந்தைகள் ஒன்றன் மேல் ஒன்று விழுந்துகொண்டு அந்த இடத்தில் தேங்காய் பொறுக் குவார்கள் அவர்களை விலக்கிக்கொண்டு தேங்காய் உடைக்க வேண்டும். இல்லையானால் ஆபத்து ஏதாவது வந்துவிடும். அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து கொண்டு காயமடைந்தால் என்ன பண்ணுவது என்று வேறுகவலை. தேங்காய் உடைகிறபோது சிலபெரியவர்கள் அந்தக்குழந்தைகளை விலகிக் கொள்ளச் சொல்லிப் பொறுக்க வந்தார்கள் எங்களைப் பொறுக்கக்கூடாது என்று சொன்னால் உங்களுக்கு என்ன இதில் பாத்தியதை இருக் கிறது? என்று ஒரு பையன் கேட்டான். ஓகோ இந்தக் குழந் தைகள் எல்லாம் தான் பிள்ளையாருக்கு உறவு என்று எனக்கு அப்போது தோன்றியது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தத் தேசத்தில்தான் அந்தப்பழக்கம் இருக்கின்றது என்று சொன்னேன் அல்லவா? இன்னொன்று கணபதியைக் காட்டிலும் சரீரத்தில் பருமனான ஸ்வாமி வேறு யாரும் இல்லை. சிரசு யானையின் தலை பெரிய வயிறு பெரிய உடம்பு. அவருக்கே ஸ்தூலகாயர் என்று பெயர். ஒரு மலை போல இருக்கிறார். ஆனால் அவர் குழந்தை.

அப்படி என்றால் குழந்தைக்கு எது அழகு என்று பார்த்தேன். குழந்தை என்றால் அந்தப் பருவத்தில் நிறையச் சாப்பிட வேண்டும். உடம்பு கொஞ்சம் கூட இளைக்கக் கூடாது. அது தான் குழந்தைக்கு அழகு. ஒரு சந்தியாசி நிறையச் சாப்பிட்டுக் கொண்டு பெரிய சரீரியாக இருந் தால் அது அவருக்கு அழகல்ல. வயசாகிவிட்டால் ராத்திரி உபவாசம் இருப்பார்கள். குழந்தை அப்படி இருப் பது அழகா. குழந்தை என்றால் தொந்தியும் தொப்பை யுமாக கொழுகொழு என்று இருப்பதுதான் அழகு. நிறையச் சாப் பிடுவதுதான் அழகு. குழந்தைகள் நல்ல புஷ்டியாக இருக்கவேண்டும் என்பதை இந்தக் குழந்தைச் சாமியே காட்டிக் கொண்டிருக்கிறார்.

இந்த ஸ்தூல காயர் நமக்கு வேறு ஓர் ஈசுவர தத்துவத்தையும் விளக்கிக் கொண்டிருக்கிறார். எப்படி? இவ ருக்கு வாகனம் என்ன? மூஞ்சூறு. இவரோ யானைமாதிரி இருக்கிறார். அதற்கு நேர்விரோமாக ஆகிருதி உடையது மூஞ்சூறு. இதை அவர் தம்வாகனமாக வைத்துக் கொண்டி ருக்கிறார். மற்ற சாமிகளுக்காவது ஒரு மாடு, ஒரு குதிரை, ஒருபட்சி என்று இருக்கிறது. இவரோ தாம் எத்தனைக்கு எத்தனை பெரிய சாமியாக இருக்கிறாரோ அத்தனைக்கு அத்தனை சின்ன வாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார். சுவாமி எதை வாகனமாக வைத்துக் கொண்டிருந்தாலும் வாகனத்தினால் சுவாமிக்கு கௌரவம் இல்லை. சுவாமியால்தான் வாகனத்துக்குக் கௌரவம். வாகனத் துக்குக் கௌரவம் கொடுக்க, அதனுடைய சக்திக்கு ஏற்றபடி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நெட்டிப் பிள்ளையார் மாதிரியாகக் கனம் இல்லாமல் இருக்கிறார். அதற்குச் சிரமம் இல்லாமல், ஆனால் அதற்கு மரியாதை, கௌரவம் எல்லாம் உண்டாகும்படியாகத் தம் உடம்பை வைத்துக்கொண்டிருக்கிறார். அந்தப் பிள்ளையார் மற்றவர்களை உபகரணமாக வைத்துக்கொண்டு, அவர்களுக்கு ஓர் அந்தஸ்தைக் கொடுத்தாலும், தாம் அவற்றுக்கு ஒருபாரமாக இல்லாமல் இருக்கிறார் என்ற பெரிய தத்துவத்தை அவருடைய வாகனம் நமக்குக் காட்டுகிறது. பக்தர்களுக்கு ஏற்றபடி பகவான் இருந்து அநுக்கிரகம் செய்கிறார் என்பது இதிலிருந்து விளங்குகிறது. அவர் ஏகதந்தம் உடையவர். ஏகதந்தம் உபாஸ்மஹே என்று பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

அகஜாநநபத்மார்க்கம் கஜாநநமஹறிசம்/
அநேகதம் தம் பக்தாநாம் ஏகதந்தம் உபாஸ்மஹே//

என்று பழைய நாளிலிருந்தே விக்னேஸ்வரரைப் பற்றி ஒரு சுலோகம் சொல்லிக்கொண்டு வருகின்றோம்.

அகம் என்றால் மலை. நகம் என்றாலும் மலைதான். கம் என்றால் போவது. கம் ஒரித்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் சஞ்சரிப்பது, அசைவது என்று பொருள். அகம் என்றால் அசையாதது. மலை ஓர் இடத்திலிருந்து இன்னொர் இடத்திற்குப் போகாது, அசையாது, மரம் செடிகொடி இவற்றுக்குக் கூட கொஞ்சம் அசைவது போன்ற வளர்ச்சி இருக்கிறது. ஆனால் மலை அசைவ தில்லை, வளருவதில்லை. கம்-சஞ்சரிப்பது. அகம் என்றால் சஞ்சரிக்காதது. அதனால் அகம் என்றால் சஞ்சரிக்காதது. அதனால் அகம் என்பதற்கு மலை என்று பொருள் வந்தது.

அகஜா ஆநநம் அகஜாநநம். அகஜா - மலைக்குப் பிறந்தவள், மலைமகள், பார்வதி. ஆநநம் என்பது முகம். அகஜா ஆநநபத்மம் - மலைமகளுடைய முகமாகிற தாமரை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தாமரை சூரியனைக் கண்ட மாத்திரத்தில் மலர்கிறது. அகஜா ஆநநபத்ம அர்க்கம் என்றால் சூரியனைப்போல இருக்கிற விநாயகனைக் கண்ட மாத்திரத்தில் மலை மகளுடைய முகமாகிய தாமரை ஆனந்த பரவசமாக மலர் கிறது. அம்பாளுடைய முகம் விகசிக்கிறது.

கஜாநநம் - விநாயகனை, யானை முகத்தவனை. அஹர்நிசம் உபாஸ்மஹே - அல்லும்பகலும் உபாசனை பண்ணுகிறேன். நமஸ்காரம் செய்கிறேன் என்பது அர்த்தம்.

அப்படிச் செய்வதற்கு இந்தத் தேசத்தில்தான் முடியும். ஏன் தெரியுமா? இங்கேதான் ஒவ்வொரு தெரு மூலையிலும் ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறது. பிள்ளையாருக்குக் கும்பிடு போடக் கூடாது என்று பிடி வாதமாக இருக்கிறவனைத் தவிரப் பாக்கிப்பேர், தம்மையும் அறியாமல் போகிறபோக்கிலேயே ஒரு கும்பிடு போட்டு விடுவார்கள். கொஞ்சம் தெரிந்து பக்தி பண்ணு கிறவர்கள் குட்டிக் கொள்ளவும் கொள்வார்கள்.

அகஜாநநபத்மார்க்கம் கஜாநநமஹர்நிசம்/
அநேகதம் தம் பக்தாநாம் ஏகதந்தம் உபாஸ்மஹே//

அநேகதந்தம் பக்தானாம் என்பதை அநேகதம், தம், பக்தா நாம் என்று பிரிக்கவேண்டும். அநேகதம் என்றால், எவ்வளவு விதமான அநுக்கிரகம் இருந்தாலும் பக்தானாம் - பக்தர்களுக்கு. பலவகை அநுக்கிரகங்களைப் பக்தர்களுக்கு உடனே செய்யிறார். தம் என்றால் அப்பேர்ப்பட்டவர் என்று அர்த்தம். அவர் எத்தகையவர்? பக்தர்களுக்கு அனேக விதமான அளவற்ற அநுக்கிரகத்தைச் செய்பவர். ஏகதந்தம் உடையவர் ஒற்றைக் கொம்பர்.

அநேகதந்தம் பக்தானாம் ஏகதந்தம் முதலில் அநேகதம் தம் என்று பிரிக்க வேண்டும். பிறகு ஏகதந்தம் என்று பிரிக்க வேண்டும். தந்தம் என்றால் கொம்பு. இரண்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொம்பிலே ஒரு கொம்பை அவரே பாரதம் எழுதுவதற்காக ஒடித்துக்கொண்டு விட்டார் என்பது ஒரு கதை. ஆகவே அவருக்கு இருப்பது ஒரு கொம்புதான்.

ஒவ்வொருத்தருக்கும், ஒவ்வொருபிராணிக்கும் ஒவ்வொன்றிலே அதிக கௌரவம் இருக்கும், சவ்வுரிமான் என்று உண்டு. அதன் கௌரவம் வாலில்த் தான் இருக்கின்றது. அது தன்வாலுக்கு துளிகூட ஆபத்துவராமல் காப்பாற்றிக் கொள்ளும். மயில் என்றால் அதற்குத் தோகை விஷேசம். அதற்கு அகங்காரம், பெருமை, கர்வம் எல்லாம் அதன் தோகைதான். அதை யாக்கிதையாக அது ரட்சிக்கும், யானை எதை ரட்சிக்கும்? தன் தந்தத்தைத் தீட்டி வெள்ளை வெளேரென்று வைத்திருக்கும்.

இந்த யானை என்ன பண்ணுகிறது என்றால் அந்தக் கொம்பில் ஒன்றையே ஒடித்துக் கொண்டு மகாபாரதத்தை எழுதிற்று. தன் அழகு கௌரவம் கர்வம் எல்லாவற்றுக்கும் காரணமாக இருக்கிற ஒன்றைக் காட்டிலும் தர்மத்தைச் சொல்லுகிற ஒன்று தான் பெரிது என்பதை அங்கே இந்த யானை காட்டியது. நியாயத்திற்காக, தர்மத்திற்காக, வித்தைக்காக எதையும் தியாகம் பண்ணவேண்டும் என்பதை, தானே தியாகம் பண்ணிக் காட்டியிருக்கிறது.

சுவாமிக்கு ஆயுதமென்று தனியாக ஒன்றும் வேண்டியதில்லை. எதையும் ஆயுதமாக அவர் நினைத்தால் உபயோகித்துக் கொள்வார் என்பதற்கும் இது உதாரணம், தம்முடைய சரீரத்தில் எது உத்கிருஷ்டமான பாகமோ அதை எடுத்துக்கொண்டே லோகத்தில் வித்தை பரப்புவதற்கும், சத்தியம், ஞானம், தர்மம் எல்லாம் பரப்புவதற்கும் விநாயகர் மஹாபாரதத்தை எழுதினார் என்ற தத்துவம் நமக்குத் தெளிவாகிறது.

தமிழ்ப்பாஷை தெரிந்தவர்களுக்கு ஔவையார் என்றால் தெரியாமல் இருக்காது. அவளுடைய ஒரு வாக்கிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மானது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அவள் எழுதிய புஸ்தகங்களுக்குள் ஒன்று விநாயகர் அகவல். அது முழுக்க யோக சாஸ்திரம். எப்படி தியானம் பண்ணவேண்டும்? குண்டலினி சக்தியை ஸஹஸ்ராரத்திற்கு எழுப்புவது எப்படி? என்பவைபோன்ற பல சூக்ஷ்மமான கருத்துக்களை, யோக சாஸ்திர விஷயங்களை - விநாயகர் அகவல் மூலம் ஔவையார் தெரிவித்திருக்கிறார்கள். அவர்-அந்தப்பட்டி - ஆத்திசூடி போன்ற இதர நூல்களும் செய்திருக்கிறார்கள்.

ஆத்திசூடி என்றால் பரமேஸ்வானுக்குப் பெயர். அத்திப்பூ, சந்திரகலை போல இருக்கும். இன்னொரு பூவையுங்கூட அவர் சூட்டிக்கொள்வார். அதுதான் கொன்றைப்பூ. பஞ்சாட்சர மந்திரத்திற்குப் பிரணவத்தைச் சேர்த்தால் ஆறு அக்ஷரம். அந்த ஆறு அக்ஷரமும் ஆறு தளங்கள் மாதிரி. கொன்றைப்பூவுக்கு ஆறு தளங்கள் உண்டு. அந்த ஆறு தளங்களுக்கு மத்தியில் கிரந்தத்திலே பிரணவம் எழுதினால் எப்படி இருக்குமோ அப்படிக் கேசரம் இருக்கும்.

ஆறுதளங்களோடு சேர்ந்த பிரணவம் எப்படியிருக்குமோ அப்படி இருக்கிறது கொன்றைப்பூ. அது ஈஸ்வரனுக்கு மிகவும் பிரீதியான புஷ்பம். அவன் எப்போதும் கொன்றை மலர் அணிந்து கொண்டிருக்கிறான். தமிழில் தேவராம் பாடுகிறவர்கள் கொன்றை அணிந்தவனாகப் பல இடங்களில் பாடியிருக்கிறார்கள்.

மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே என்ற தேவாரம், எல்லோருக்கும் தெரிந்திருக்கும். கொன்றைக்கு அமரத்தில்,

ஆரக்வதே ராஜவ்ருக்ஷசம்யாகசதுரங்குலா என்று பல பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆரக்வதம் என்று ஒரு பேர் இருக்கிறது. சம்யாகம் என்று ஒரு பேர். ராஜவிருக்ஷம், சதுரங்குலம் என்றும் பேர். இந்தப் பிரணவ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மலர் ஈஸ்வரனுக்கு மிகவும் பிரியமானது.

விநாயகருக்கு பிரணவ ஸ்வரூபி, துதிக்கையோடு இருக்கிற அவரது சிரசு, கையிலே இருக்கும்படியான மோதகம் இவற்றையெல்லாம் சேர்த்துப்பார்த்தார் பிரணவம் மாதிரியாக இருக்கும். அந்தப் பிரணவத்தைப் புருவத்தின் மத்தியில் தியானம் பண்ணிக்கொண்டு ஔவையார் பண்ணின அநுக்கிரகந்தான் விநாகர் அகவல். யோகசாஸ்திரம், தியானம் பண்ணுகிறமுறை எல்லாம் அதில் இருக்கின்றன. அதைப்பற்றி ஒரு கதை சொல்வதுண்டு.

சுத்தரமூர்த்தி சுவாமிகளுக்கு, சேரமான் பெருமாளும் யானை மீதும் குதிரைமீதும் கைலாசத்திற்குப் போகும் போது ஔவையாரையும் வரச்சொன்னார்களாம். வந்தால் தங்களுடைனேயே கைலாசத்திற்கு அழைத்துப் போவதாகச் சொன்னார்களாம். ஔவையார் அப்பொழுது விநாயக பூஜை பண்ணிக் கொண்டிருந்தார். கைலாசத்தைவிட எனக்கு விநாயகர் பூஜை தான் முக்கியம் என்று சொல்லி விட்டார்களாம் ஔவை. அவர்கள் போய்விட்டார்கள். பூசை எல்லாம் முடிந்த பிறகு, கைலாசத்திற்கு அவர்கள் போய்விட்டார்களே, நான் எப்படிப்போவது, பிள்ளை யாரே? என்றுற அவள் பிரார்த்தித்துக் கொண்டாளாம். அவர்கள் கைலாசம் போய்ச் சேருவதற்குள் விநாயகரே தம்துதிக் கையால் அவளைக் கைலாசத்தில் தூக்கி வைத்துவிட்டார் என்று ஒருகதை சொல்வது வழக்கம்.

விநாயகர் குழந்தைச் சுவாமி. அப்பா அம்மாவாக இருக்கிற சுவாமி குழந்தை ஆகிவிட்டால் அந்தக்குழந்தைச் சுவாமிக்கு நிறையச்சாப்பாடு போடவேண்டும். நிறைய மோதகங்கள் கொடுக்கவேண்டும். குழந்தையென்றால் புஷ்டியான ஆகாரமாக நிறைய எப்போதும் கொடுத்தால் தான் நல்லது. குழந்தைகளுக்குச் சாப்பிடுவது அழகு. இந்தக் குழந்தையும் அப்படித்தான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மற்றொருவிஷயம், நமக்குப் பார்க்கப்பார்க்க அலுக்காத சாமான்கள் சில. சந்திரன், சமுத்திரம், யானை இவற்றையெல்லாம் எத்தனை தடவை பார்த்தாலும் இன்னும் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும் என்றே தோன்றும். பார்க்கப் பார்க்க ஆனந்தம் பொங்கும். அதனால்தான் குழந்தைச் சுவாமி தன்னைப் பார்க்கிற ஜனங்களுக்கு எல்லாம் ஆனந்தம் எப்போதும் பொங்கிக் கொண்டே இருக்கும்படியான யானை உருவத்தோடு இருக்கிறார். அது ஆனந்ததத்துவம், ஆராத ஆசையின் தத்துவம்.

அவர் பார்வதி பரமேஸ்வரர்களுக்குப் பிள்ளை. இந்த உலகத்திற்கே பிள்ளையாக ஆவிர்பவித்ததினால் அவரை நாம் விநாயகர் என்பதைவிடப் பிள்ளையார் என்றே அழைக்கிறோம்.

கேதாரத்திற்குப் போனாலும் அங்கே ஒரு குன்றில் பிள்ளையார் இருப்பார். கன்னியாக்குமரிக்குப் போனாலும் ஒரு பிள்ளையார் இருக்கிறார் என்று ஒரு கணபதி பக்தர் என்னிடம் வந்து மிகவும் சந்தோஷப்பட்டுக்கொண்டார்.

விநாயகதத்துவத்தை இப்படி நாம் தோண்டித் தோண்டிப் பார்த்துக் கொண்டே போனால் - தியானம் பண்ணுவது, தத்துவ சிவாரணை பண்ணுவது என்று இப்படியே செய்து கொண்டு போனால் - அநேக தத்துவங்கள் தோன்றிக்கொண்டே இருக்கும். அதற்கு முடிவே இராது.

இதற்கு ஏதாவது திருஷ்டாந்தமாகச் சொல்லவேண்டு மானால் காவியங்களைப் பற்றி ஒரு கவி சொன்னதைச் சொல்ல லாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பச்யேயமேகஸ்யகவே: க்ருதிம் சேத்
ஸ்ரஸ்வதம் போசமவைமி ரிக்தம் 1
அந்த: ப்ரவிச்யாயமவேசிதச்சேத்
கோணேபிரவிஷ்டா கவிகோடிரேஷா 11

நிறையக் காவியங்கள் இருக்கலாம். எல்லாவற்றையும் படிக்கவேண்டும் என்பதில்லை. ஒரு மகாகவி பண்ணியகாவியத்தை முழுவதும் படித்துவிட்டால் இதைத் தவிரச் சரஸ்வதியினுடைய ஆபணம், அலங்காரப்பொருள் வேறு என்ன இன்னொரு கவியினிடத்தில் இருக்கப் போகிறது என்று தோன்றிவிடும். கம்பனுடைய காவியம் ஒன்றைப் படித்துவிட்டால் போதும். அப்படித்தான் தோன்றிவிடும். சரஸ்வதியின் பொக்கிஷத்தில் இருக்கிற ஆபரணங்கள் எல்லாவற்றையும் அவர்தம் இந்தக்காவியத்தில் கொண்டுவந்து கொட்டிவிட்டாரே. இனி அவருடைய பொக்கிஷம் காலியாகத்தான் கிடக்கும் என்று தோன்றி விடும்.

ஸாரஸ்வதம் கோசமவைமி ரிகதம் 1

கோசம் என்றால் பொக்கிஷம். இந்தக் காவியத்தில் தான் அந்தப் பொக்கிஷத்தில் இருக்கும்படியான பொருட் கள் எல்லாம் வந்துவிட்டனவே. இனி அங்கே என்ன இருக் கப் போகிறது? என்று சினத்து அவளுடைய பொக்கிஷத்தைப் பார்க்கலாம்

என்று போனால் அங்கே எப்படி இருக்கிறது?

அந்த: பிரவிச்யாயமவேசிதச்சேத்
கோணே ப்ரவிஷ்டா கவிகோடிரேஷா 1

அவளுடைய அறையில் போய்ப்பார்த்தால் இந்த ஒரு கவியினுடைய காவிய ரத்தினங்கள் மாத்திரம் அல்ல: அநேக கவிகளுடைய காவிய ரத்தினங்கள் எல்லாம் எங்கோ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மூலையில் கிடக்கின்றன. இவற்றைத்தவிர அந்தப் பொக்கிஷத்தில் இன்னும் எத்தனை எத்தனையோ விதமான காவியரத்தினங்கள் சிதறிக்கிடக்கின்றன.

இப்படி ஒரு கவி சொன்னார். அதைப்போலத்தான் ஒரு மூர்த்தியின் ஸ்வரூப தத்துவத்தை நாம் ஆராய்ந்து பார்க்கிற போது, ஸ்வரூபத்தைத் தியானம்பண்ணி, அநுசந்தானம் பண்ணி அதில் இவ்வளவுதான் தத்துவம் என்று தட்டமாகக் கணக்குப் பண்ணிச் சொல்லிட முடியாது. நம் கையில் பஞ்சபாத்திர உத்தரணியை எடுத்துக் கொண்டு போய்க் கடல்நீரை முழுவதையுமா எடுத்து வந்து விட்டோம்? அப்படியே நம் அறிவுக்கும் சுவாநுப வத்துக்கும் தட்டுப்பட்ட வரையில் சில தத்துவங்களைச் சொல்லுகின்றோம். இவ்வளவுதான் அந்த மூர்த்தியின் தத்துவம் என்று சொல்லிவிட முடியாது. நாம் கண்டதோ அங்கே இருப்பதோ ஒரு மூலை.

அநாதி காலந்தொட்டு விநாயக ஸ்வரூபம் நமக்கு அநுக்கிரகம் பண்ணிக்கொண்டு வருகிறது. எந்தச் சுவாமியை உபாசிப்பதானாலும் முதலில் விநாயகருடைய அநுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டால் தான் அந்தக் காரியம் விக்னமில்லாமல் நடைபெறும். பெருமாள் கோவிலுக்குப் போனாலும் தும்பிக்கையாழ்வார் என்று ஒருவர் இருக்கிறார். அம்பாள் கோயிலுக்குப் போனாலும், சிவன் கோயிலுக்குப் போனாலும் விநாயகர் இருக்கிறார். நம்தேசத்தில் ஒவ்வொரு தெருக்கோடியிலும் விநாயகர் இருக்கிறார். அவரை உபாசனை பண்ணினால் எல்லா விதமான அநுக்கிரகமும் ஏற்பட்டுவிடும். அப்புறம் வேறு சுவாமியிடமே போக வேண்டாம். அவரையே பிரதான மூர்த்தியாக வைத்து உபாசிக்கிற மதத்திற்குத்தான் காணாபத்தியம் என்று பெயர்.

பிள்ளையாருக்கு எதிரே நின்று தோப்பிக்கரணம் போடுகிறோமே, அதை நமக்கு எல்லாம் காட்டியவர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மஹாவிஷ்ணு தான் என்று ஒருகதை இருக்கிறது. ஒரு சமயம் மஹாவிஷ்ணுவினுடைய சக்கரத்தைப் பிடுங்கிக் கொண்டு அவர் மருமான் பிள்ளையார் தம் வாயில் போட்டுக் கொண்டு விட்டாராம். பிள்ளையாரிடமிருந்து பிடுங்குவது என்றால் அதுமுடியாது. ஆனால் அவரைச் சிரிக்க வைத்து சந்தோஷத்தில் அவர் வாயிலிருந்து அது கீழே விழுந்தால் எடுத்துக்கொண்டு ஓடிவிடலாம் என்று மஹாவிஷ்ணுவுக்குத் தோன்றியதாம். உடனே நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக்கொண்டு ஆடினாராம். விநாயகர் விழுந்து விழுந்து சிரித்தார். சக்கரம் கீழே விழுந்தது. எடுத்துக்கொண்டு விஷ்ணு ஓடிவிட்டார். இது தான் அந்தக்கதை.

தோர்பி : கரணம் என்பதே, தோப்பிக் கரணம் என்று மாறியது. தோர்பி : நான்கு கைகளினால் என்று அர்த்தம். கர்ணம் என்றால் காது என்று அர்த்தம். தோர்பி : கரணம் என்றால் நான்கு கைகளால் காதைப்பிடித்துக் கொள்ளுவது.

விக்கினேஸ்வரனுடைய அனுக்கிரகத்தினால் லோகத்தில் எல்லாக்காரியங்களும் விக்கினமில்லாமல் நடைபெறுகின்றன. தியாகையர் அவர்கள் கிரிராஜ சுதாதநய என்று அவரைத்தான் முதலில் பாடுகிறார். நாமும் அவருடைய அநுக்கிரகத்துக்குப் பாத்திரமாகும் படியாக நடந்து கொள்ளவேண்டும்.

- தெய்வத்தின் குரல் முதற்பகுதி -

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அட்டவணை 1

அஷ்டபரிவாரங்கள்

	ரௌரவம் II.32.13	அஜிதம் II.39.7.10	தீப்தம் 67.1,2	காரணம் I.60.9,10	தீப்தம் 11.15-17	யோகஜம் 17.15a -17	வீரம் 41.3-6	சுப்ரபேதம் 39.26-28a
கிழக்கு	ரிஷபம்	ரிஷபம்	ரிஷபம்	ரிஷபம்	ரிஷபம்	ரிஷபம்	ரிஷபம்	சூரியன்
அக்கினி	துர்கா	பிரம்மா	காத்யாயனி	அகஸ்தியர்	சிம்மவாஹினி	துர்கா	துர்கா	அக்னி
தெற்கு	சாமுண்டி	மாத்ருகணம்	மாத்ருகணம்	காத்யாயனி	மாத்ருகணம்	சப்தமாத்ரு	மாத்ருகணம்	மாத்ருகணம் / விஷ்ணு
நிருதி	கணேசர்	விநாயகர்	கணநாயகர்	கணேஸ்வரர்	விக்னநாயகர்	கணநாதர்	விக்னேஸ்வரர்	விக்னேஸ்வரர்
மேற்கு	ஷண்முகர்	ஸ்கந்தர்	சுப்ரமண்யர்	பிரம்மா	குமரன்	சுகுமாரன்	குமரன்	சுப்ரமண்யர்
வாயு	ஜ்யேஷ்டா	ஜ்யேஷ்டா	ஜ்யேஷ்டா	ஷண்முகர்	காகவாஹினி	ஜ்யேஷ்டா	ஜ்யேஷ்டா	ஜ்யேஷ்டா /லஷ்மி
வடக்கு	விஷ்ணு	விஷ்ணு	கேசவர்	கேசவர்	கேசவர்	விஷ்ணு	விஷ்ணு	துர்கா /பிரம்மா
ஈசானம்	பானு	ரவி	பாஸ்கரன்	பாஸ்கரன்	பாஸ்கரன்	சண்டேசர்	பாஸ்கரன்	சண்டேசர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அட்டவணை 2

நவக்கிரகங்கள்

ஸ்ரீ நவக்ரஹ பிரதிஷ்டா லேச சங்கிரகம்

	பூர்வ காரணம்	உத்தர காமிகம்	மத்ஸய புராணம்	கிரணம்	சாந்திரத் னாகரம்	சாமவேத நவக்ரக பூஜை	பிரபஞ்ச சாரம்	ரிக்வேத ஆரா தனை க்கிரமம்
மத்தி	சூரியன்	சூரியன்	சூரியன்	சூரியன்	சூரியன்	சூரியன்	சூரியன்	சூரியன்
கிழக்கு	சந்திரன்	சந்திரன்	சுக்கிரன்	சுக்கிரன்	சுக்கிரன்	சந்திரன்	சந்திரன்	சுக்கிரன்
அக்னி	செவ்வாய்	சுக்கிரன்	சந்திரன்	செவ்வாய்	சந்திரன்	செவ்வாய்	செவ்வாய்	சந்திரன்
தெற்கு	புதன்	செவ்வாய்	செவ்வாய்	புதன்	செவ்வாய்	புதன்	புதன்	செவ்வாய்
நிருதி	சனி	சனி	ராகு	சனி	ராகு	சனி	சனி	ராகு
மேற்கு	வியாழன்	புதன்	சனி	குரு	சனி	சுக்கிரன்	குரு	சனி
வாயு	ராகு	ராகு	கேது	ராகு	கேது	ராகு	ராகு	கேது
வக்கு	சுக்கிரன்	குரு	குரு	சுக்கிரன்	குரு	குரு	சுக்கிரன்	குரு
ஈசானம்	கேது	கேது	புதன்	கேது	புதன்	கேது	கேது	புதன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

படம் - 1 பரமசாயீ வாஸ்துபதம்



படம் - 2 விமானங்கள்



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



நாகர விமானம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மண்டபங்களுடன் கர்பகிருகம்



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

படம் - 3 கர்பகிருக தேவதாஸ்தாபன பதங்கள்



Digitization by eGangotri-South Center
CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

படம் - 4 பிராகாரங்கள்



படம் - 5 பரிவாராலயங்கள்



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

படம் - 6 திருக்கோவில் அமைப்பு



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

படம் - 7 கோபுரம்



CC-0. In Public Domain. Cuddalore Collection, TN.

Digitization by eGangotri-South Center

படம் - 8 திருக்கோவில் தத்துவார்த்தம்



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center







CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அச்சிட்டோர் : TLS பிரிண்டர்ஸ், பொன்னேரி. ✆: 274228

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விலை ரூ. 35/-

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.